# தமிழரசு

1-5-1986 75 காசு









பாவேந்தர் பாரதிதாசன்

தோற்றம் : 29-4-1891 மறைவு : 21-4-1964

மே தின நூற்றாண்டு

# மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மே தினச் செய்தி

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும்
பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உழைக்கும் வர்க்க
உடன் பிறப்புக்களே!

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திரு நாளாக மே முதல் நாள் உலகெங்கும் கொண்டாடப்படுகிற திருநாள் ஆகும். மே தினம் உலக முழுவதும் கொண்டாடப்படவேண்டும் என்று 1889-ம் ஆண்டு பாரிசில் கூடிய உலக சோஷலிஸ்ட் அமைப்பு முடிவெடுத்தது என்றாலும் அதற்கு அடிப் படைக் காரணமாக விளங்கியது, அமெரிக்கத் தொழிலாளர்கள் 1886-ல் சிக்காகோ நகரில் எழுப்பிய உரிமை முழக்கந்தான். இவ்வகையில் மே நாளுக்கான முதல் முழக்கம் தோன்றி இந்த ஆண்டுடன் நூறு ஆண்டுகள் நிறைவுறுகின்றன என்பதால் இந்த ஆண்டு மே தின விழா மிகவும் சிறப்பு வாய்ந்ததாக விளங்கக் கூடியதாகும்.

தொழிலாள வர்க்கம் தனது கூலி உயர்வுக்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மட்டுமே போராடும் தன்மை படைத்தது என்ற நிலையை மாற்றி, மொத்த சமுதாயத்தின் உயர்வுக்காகவும் சமத்துவ சமுதாயம் அமைப்பதற்காகவும் போராடும் முன்னோடிகளாகத் தொழிலாளர்கள் விளங்க வேண்டும் என்பதை நான் கடந்த ஆண்டுகளில் வெளியிட்ட மே நாள் செய்திகளில் குறிப்பிட்டிருக்கிறேன். அதையொட்டி உழைப்பாளர் வர்க்கத்திற்கு வாய்த்துள்ள கடமைகளை நினைவூட்ட விரும்புகிறேன்.

"பொது உடைமைத் தத்துவம் என்பது ஒரு ஒழுக்கக் கோட்பாடு. நேர்மையான உழைப்பு என்கிற நெறி அதன் இதயம் போன்றது" என்று புதிய சோவியத் ரஷ்யாவின் சிற்பியான லெனின் கூறியிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சியையும் சமுதாயச் செழிப்பையும் உருவாக்குவது உழைக்கும் கரங்கள் தான்.


"அக் கரங்கள் ஒற்றுமையோடு இணைந்து நிற்க வேண்டும்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்.

தொழிலாளர்களே தொழிற்சங்கத் தலைமை யேற்கும் நிலை.

பேச்சுவார்த்தை மற்றும் சட்டபூர்வ வழிகளால் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது.

அடிப்படை உரிமைகளின்றித் தவிக்கும் கோடிக்கணக்கான உழைப்பாளிகளுக்குப் பாது காப்பு அளிப்பது.



உற்பத்திக்கும் சமூக அமைதிக்கும் இடையூறு நேராமல் உரிமைகளைப் பெறுவது-"

போன்ற புதிய நெறிகளை, அமைப்பு ரீதியில் ஒன்று சேர்ந்துள்ள தொழிலாளர்கள் தங்கள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

"உழைக்கும் மக்களே, ஒன்று சேர்ந்திடுவீர்! பேதப்படுத்தும் சக்திகளை ஒதுக்கித் தள்ளிடுவீர்! உழைப்பவரே உயர்ந்தவர் எனும் தத்துவத்தை நிலை நாட்டுவீர்! புதிய சமதர்ம, சமத்துவ, சமுதாய அமைப்புக்கு முன்னோடும் சக்தியாகத் தலைமை தாங்கிடுவீர்!" என உழைக்கும் வர்க்கத்தை இரு கரங்கூப்பி அழைக்கிறேன். உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த மேநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

(எம். ஜி. இராமச்சந்திரன்)


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - சித்திரை 18

மலர் : 16 இதழ் : 21

1-5-1986

# உழைப்பு — உழைப்பாளர்!

—பேரறிஞர் அண்ணா



* பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம்.
பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம்.
நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள், மே
வாழ்வுக்காக-விடுதலைக்காக-உரிமைக்காக
தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்
றுக்கு 8 மணி நேரம் உழைப்பது; 8 மணிநேரம்
குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது;
மற்ற 8 மணிநேரம் ஓய்வாக இருப்பது-இந்தத்
திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது!

* பாட்டாளிகளின் போராட்ட முயற்சியின்
இடையிலே ஒருநாள் ஓய்வு பெற்று நின்று,
சென்ற கால-வருங்கால கணக்கைப் பார்க்கும்
திருநாளே இந்த மே நாள்!

* உலகம் மாயம் இல்லை; உழைப்பவன் வாழ்வும்
மாயமன்று; ஆனால், உழையாதவன் உல்லாசத்
தில்தான் மாயம் இருக்கிறது!

* பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகை
கள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள்,
நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள்; அவை
களை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும்.
ஆனால் அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய
வேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம்
நாட்டிலே எனச் சிந்திக்க வேண்டும்!



* சமதர்மம் ருசிகரமான வார்த்தை - நாட்டிலே
இன்று பலராலும் பேசப்பட்டுவரும் இலட்சியம்.
பலராலும் என்றால், உண்மையிலேயே அந்த
உயர்ந்த இலட்சியத்தின்படி சமூகம் திருத்தி
அமைக்கப்படவேண்டும்!

* நீதியையும் நேர்மையையும், சமுதாயத்தில்
அமைதியையும், சுபிட்சத்தையும் விரும்பும் எவ
ரும், தொழிலாளர் பிரச்னையை அலட்சியப்
படுத்தி விடவோ, அல்லது அடக்குமுறைகளால்
அழித்துவிடக் கூடுமென்றோ எண்ணமுடியாது.




* வேலை, மனிதத் தன்மையை மாய்க்காத அளவு
இருக்க வேண்டும்!

* உழைப்பு உருக்குலைந்து விடக் கூடாது-
உடலையும் சரி, உள்ளத்தையும் சரி, வாழ்விற்
காக வசதி தேடுவதற்கு உழைத்து, அந்த
உழைப்பினாலே உருக்குலைந்து போகும் நிலை
மனிதனுக்கு ஏற்படுமானால்-அவன் முட்டை
யிட்டதும் செத்துவிடும் கோழி; அரும்பு விட்ட
தும் பட்டுப்போகும் செடிபோலப் பயன் காணா
மலும்-பயன்தராமலும் போய்விடுகிறான்!

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இரு
வர்க்கம் இருப்பது பொதுவாகவே சமூகத்துக்குக்
கேடு, ஆபத்து என்று எடுத்துக்கூறி, பாட்டாளியின்
துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம
நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின்
ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம்
அளவு, கட்டுதிட்டம் இன்றி முதலாளிகளால் சூறை
யாடப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று துவக்
கப்பட்ட முதல் முயற்சி மேதினம்.

# உலகத் தமிழ்ச் சங்கம் மலர்ந்தது



**இலண்டனில் வாழும் என் — தமிழ்த் தோழி!**

எப்போதும் நலன் விசாரணை ஒன்றையே முன்வைத்து நான் உனக்குக் கடிதம் எழுதுவேன். ஆனால் இம்முறை, நலன் விசாரணையாக மட்டுமல்ல — தமிழகத்தில் நடைபெற்ற எழுச்சி மிகும் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவைக் குறித்த இனிய செய்திகளின் தொகுப்புரையாகவும் எனது கடிதம் அமையப் போகிறது.

வங்கக் கடலா, வானத்து நட்சத்திரங்களா என்று சந்தேகப்படும் வகையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் மதுரை மாநகருக்கு திரண்டு வந்திருந்தனர் பொதுமக்கள்.

ஏப்ரல் 12ஆம் நாளே விழா தொடங்கிவிட்டது. அன்று மாலை 5.30 மணியளவில், மருத்துவக் கல்லூரி அரங்கத்தில் மதுரை அரசு இசைக் கல்லூரி மாணவ மாணவியரின் இசை நிகழ்ச்சியுடன் விழா தொடக்கம் ஆகியது. பின்னர் 6.30 மணியளவில் திரு தி.எல்.மகராசன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இரவு 8-30 மணியளவில் கலைமாமணி சொர்ணமுகி குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

**மறுநாள் நிகழ்ச்சி, 13.4.86 காலை 9.30 மணியளவில் மருத்துவக் கல்லூரி அரங்கத்தில், திரு எம்.பி.என். சேதுராமன், திரு எம்.பி.என்.பொன்னுசாமி குழுவினரின் நாயன இசையுடன் தொடக்கமாகியது.**

அதன் பின்னர் அரசுக் கவிஞர் திரு புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில் 'சங்கச் சான்றோர்கள் நன்மொழி' என்ற தலைப்பில் நடைபெற்ற பாட்டரங்கத்திற்கு வருகை புரிந்திருந்த பெருமக்களை, டாக்டர் ஒளவை நடராசன் வரவேற்றுப் பேசினார்:

''தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மரபை, தமிழ்ப் பண்பைக் காக்கவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கிறது. தமிழ் இலக்கியங்களைத் தேர்ந்து கொள்ள ஓர் அமைப்பு வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் நீண்ட காலமாக நினைத்து வருகிறார்கள். அதன் விளைவே இந்த உலகத் தமிழ்ச் சங்கம்!'' என்று குறிப்பிட்டார்.

பாட்டரங்கத்தைத் தொடங்கி வைத்த எங்கள் மாநிலத் தொழிலமைச்சர் திரு.க. இராசாராம் அவர்கள்,

''உலகத் தமிழ்ச் சங்கத்தை நமது முதல்வர் அவர்கள் தொடங்கி வைப்பது, காலத்தின் கட்டாயமாகும் இந்த சங்கத்தின் மூலம் பல்வேறு நல்ல பணிகளைச் செய்ய வேண்டும்'' என்ற கருத்தைத் தெரிவித்தார்.

கவிஞர் நா.காமராசன், கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம், கவிஞர் அரசு மணிமேகலை, கவிஞர் முத்துலிங்கம், எம்.எல்.சி., கவிஞர் இ.முத்துராமலிங்கம், கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம், புலவர் மரியதாசு, கவிஞர் இளந்தேவன் ஆகியோர் கவிதை பாடினர்.

பிற்பகல் நிகழ்ச்சி மருத்துவக் கல்லூரித் திடலில் அமைக்கப்பெற்ற மேடையில், கவிஞர் சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லிசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. 'தமிழ்த்தாய் வந்தாள்' என்ற தலைப்பில் பற்பல அரிய செய்திகளை எடுத்துச் சொன்னார்.

அடுத்து, இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் தமது இனிய குரலால் பாடி அவையினை ஈர்த்தார்.


இரவு 8 மணியளவில், எங்கள் வேளாண்மைத்துறை அமைச்சர், டாக்டர் கா.காளிமுத்து அவர்களின் தலைமையில், 'சங்கத் தமிழ்க் கலைகள்' என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் தொடங்கியது.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்தோரை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் வரவேற்று உரையாற்றுகையில்,

''அன்னைத் தமிழின் புகழ் தமிழகத்தையும் கடந்து தரணியெல்லாம் பரவியுள்ளது. தற்போது 41 நாடுகளில் ஏறத்தாழ மூந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. உலகளாவிய அளவில் செயல்படுத்த இன்று ஓர் தனி அமைப்பு இல்லையே என்ற ஏக்கம் போக்கும் வண்ணம் தமிழ் கூறும் நல் உலகின் நீண்டநாள் கனவை நாளை நனவாக்குகிறார் முதல்வர்'' என்று தெரிவித்தார்.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த எங்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்.

''பட்டினப் பாலைபாடிய உருத்திரன் கண்ணனாரைத்திருமாவளவன் ஆதரித்தான். கலிங்கத்துப் பரணிபாடிய ஜெயங்கொண்டாருக்கு தாழிசைக்கு ஒரு தங்கத் தேங்காயை வழங்கினான் குலோத்துங்க சோழன்.கபிலரை



வாழ வைத்தார் பாரி வள்ளல். ஔவைக்கு அருங்கனி கொடுத்து உதவினான் அதியமான். சடையப்ப வள்ளலின் ஆதரவு இல்லாவிட்டால் கம்பர் வாழ்ந்திருக்க முடியாது. பொப்பண்ண காங்கேயரின் பேராதரவுதான் வில்லிபுத்தூராரை வாழவைத்தது. அந்த வகையில் தமிழுக்குக் கிடைத்த தலையாய வள்ளலாக புரட்சித் தலைவர்-தமிழக முதல்வர்-டாக்டர் எம்.ஜி.ஆர். திகழ்கிறார்'' என்று தெரிவித்தார்.

தொடக்க உரை ஆற்றிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. அய். சுப்ரமணியம்,

''கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை - சென்னை மாகாணத்தில் 449 புலவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்திருக்கின்றனர்'' என்று குறிப்பிட்டார்.

''தமிழ் இயற்கைமொழி, அதன் ஒவ்வொரு சொல்லுக்கும், அசைவுக்கும் பொருள் உண்டு'' என்று கூறினார் புலவர் இரா. இளங்குமரன்.

'நாடகப்பாங்கு' குறித்து உரையாற்ற வந்த டாக்டர் ஆறு அழகப்பன், ''தமிழகம் மிகப் பழங்காலத்திலேயே அதாவது 5000 ஆண்டுகளுக்கு முன்பே நாடகக் கலையை அறிந்திருக்கிறது என்றார்.

'புற இலக்கியம்' குறித்து உரையாற்றிய டாக்டர் சி.பாலசுப்ரமணியம்,

''மன்னனைப் புலவர் பாடிய செய்யுள் என்று குறிப்பிடுவதற்கு அவனை அவர் பாடியது என்பார்கள். மன்னன் அவனாகவும் புலவர் அவராகவும் வழங்கப்படுவது தமிழ் பெற்ற சிறப்பு'' என்றார்.

'அறிவியற் கொள்கைகள்' என்னும் பொருள் குறித்து உரையாற்றிய டாக்டர் க.ப. அறவாணன், ''போர், அரசியல், பொருளாதாரம், சமூகம், குடும்பம், தனி மனிதன் என 6 வகையில் அறங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றார்.

'சங்ககால வாணிகம்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் தமிழண்ணல், ''இந்த வாணிகம்தான் இன்றைய உலகத் தமிழ்ச் சங்கத்திற்குத் தோற்றுவாய் ஆகும். தமிழன் உலகில் உள்ள நாடுகளுக்கு வாணிகம் செய்யச் சென்றதால் தான் அங்கெல்லாம் தமிழ் பரவியது'' என்று குறிப்பிட்டார்.

'சங்ககால நாட்டுப்புறப் பாடலியல்' குறித்து உரையாற்றிய டாக்டர் விசயலட்சுமி நவநீத கிருட்டிணன்.

''தொல்காப்பியர் காலத்திலேயே நாட்டுப்புறப் பாடல்கள் இருந்தன'' என்றார்.

'சங்க இலக்கியத்தில் அயல் நாட்டுத் தொடர்பு' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் கா.பொ. இரத்தினம், ''உலகத்தில் தமிழர்கள் எந்தெந்த நாட்டில் இன்று வாழ்ந்தாலும் அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டைத் தாய் நாடாகக் கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

'சங்க இலக்கியத்தில் மகளிர்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் திருமதி இராதா தியாகராஜன்'. 'கணவனையும் மகனையும் பேணுவதால் பெண் என்று சொல்லப்படுகிறாள்' என்று குறிப்பிட்டார்.

'அக இலக்கியம்' என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் வ.சுப.மாணிக்கம்,

''இன்னொரு உயிருக்குத் தீங்கு செய்து, தான் இன்பம் அடைவது கூடாது என்று சொல்கிறது சங்க இலக்கியம்'' என்று தெரிவித்தார்.

'மாந்தர் ஒழுங்கும் கட்டுப்பாடும்' என்னும் பொருளில் உரையாற்றிய திரு. சு. ஸ்ரீபால்,







''கள்வர், காவலர், ஆடவர், வேந்தர் ஆகிய நால்வரையும் பொறுத்துத்தான் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்து வந்தது'' என்று குறிப்பிட்டார்.

'சங்க கால சமூகம்' என்னும் பொருளில் உரையாற்றிய டாக்டர் சை.வே.சிட்டிபாபு,

''கூட்டு மனப்பான்மையில் வாழ வேண்டும்; பிறருக்காக வாழவேண்டும் என்ற நிலை அந்நாளில் இருந்தது. பிறரது பசிப் பிணியைப் போக்க வேண்டும் என்ற இலட்சியம் இருந்தது'' என்று குறிப்பிட்டுவிட்டு, ''இன்று நமது முதல்வர் அவர்களும் இந்தப் பசிதீர்க்கும் பணியை உலகம் பாராட்டுகின்ற அளவுக்குச் செய்து வருகிறார்'' என்று எடுத்துரைத்தார்.

அவரது உரையுடன் கருத்தரங்கம் முடிவுற்றது.

பார்வையாளர் பகுதியில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்த எங்கள் முதல்வர், மேடையை நோக்கிப் பீடுநடையுடன் சென்றார்.

'மதுரை மாநகரில் சில புதிய திட்டங்கள் முதல்வரின் கையால் தொடங்கி வைக்கப்படுகின்றன' என்பதை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராசுலு, இ.ஆ.ப., எடுத்துரைத்தார்.


''மதுரை எழுகடல் தெருவில் 75 லட்ச ரூபாய் செலவில் ஒரு விற்பனை மையக் கட்டடம் உருவாக இருக்கிறது. தற்போது புதுமண்டபத்தில் உள்ள கடைகள் எல்லாம் அந்த மையத்தில் இனிமேல் செயல்படும். புதுமண்டபம் கலைச் சிற்பங்கள் நிறைந்தது. அது பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருதுகிறார்கள்.

''மதுரை டவுன் ஹால் ரோட்டில் உள்ள கூடலழகர் ஆலயத்தைச் சேர்ந்த தெப்பக்குளத்தில் சுரங்கக் கடைகள் அமைக்கப்படும். டெல்லி மாநகரில் உள்ள பாலிகா பஜார் போன்ற அமைப்பில் இது உருவாக்கப்படும். அது குளிர்பதனம் செய்யப்படும். 105 இலட்ச ரூபாய்த் திட்டம் இது.

''வீடற்றோர்க்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ,அவனியாபுரத்தில் 2000 வீடுகள் கட்டும் திட்டம் ரூ.2 கோடி 38 லட்சம் மதிப்பீட்டில் செயல்பட உள்ளது''

மாவட்ட ஆட்சியாளரின் இந்த அறிவிப்புக்குப் பின்னர், எங்கள் பொன்மனச் செம்மல் முதல்வர் இந்தத் திட்டங்களுக்கெல்லாம் தமது பொற்கரத்தால் அடிக்கல் நாட்டினார். புதிய எழுச்சியையும் புதிய வசதிகளையும் மதுரை மாநகருக்கு அவர் வழங்குவதை எண்ணி, மதுரை மக்கள் உள்ளம் பூரித்தனர்.

அந்தப் பூரிப்பின் கார்வை சிறிதும் குறையக்கூடாது என்ற வகையில், டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் இன்னிசை முழக்கம் செய்தார்.



கருத்தரங்கம்

சித்திரை முதல் நாள் நிகழ்ச்சி (14.4.86) காலை 9.30 மணியளவில் அரசுக்கலைஞர் ஷேக் சின்ன மௌலானா குழுவினரின் நாயன இசையுடன் தொடங்கியது.

'சங்க கால இசை நயம்' பற்றி டாக்டர் வீ.ப.கா. சுந்தரம் மிக அரிய விளக்கங்களுடன் எடுத்துரைத்தார்.

''மிக நுணுக்கமான இசைச் சொற்கள் தமிழில் உள்ளன. என்று குறிப்பிட்டார்.

அடுத்து, 'உலகளாவிய உயர் தமிழ்' என்ற தலைப்பில் நடை

# அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கு பெற்ற கருத்தரங்கு



பெற்ற கருத்தரங்கிற்கு-திரு எஸ் இராகவானந்தம் தலைமை ஏற்றார்.

வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு சு.செல்லப்பன் அவர்கள்,

''முன்பு தோன்றிய தமிழ்ச் சங்கங்கள் தமிழ்நாட்டின் எல்லைக்குள் நின்றுவிட்டன. தற்போது நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் தொடங்கிவைக்கப்பெறும் தமிழ்ச் சங்கம் உலகளாவிய பார்வை கொண்டது. உலகத் தமிழர் அனைவரும் போற்றும் பண்பாட்டுச் சங்கமாக இது அமைகிறது'' என்று தெரிவித்தார்.

தலைமை ஏற்ற திரு எஸ். இராகவானந்தம், தமிழ் மொழியின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார்;

''இயற்கை தோன்றிய நாளிலேயே இன்தமிழ் தோன்றிவிட்டது. பண்பாட்டு மொழி தமிழ்! அதனால் தான் அது இன்னும் இளமையோடு இருக்கிறது உலகம் அறிந்த தமிழை, உலகம் கற்கும் தமிழாக மாற்ற வேண்டும்'' என்று அவர் தெரிவித்தார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரையாற்றிய எங்கள் மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன்,
உலகப் பாட்டாளிகளே ஒன்று சேருங்கள் என்று கூறினார் கார்ல் மார்க்ஸ். உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள் என்கிறார் புரட்சித் தலைவர்'' என்று குறிப்பிட்டார்.

கிறிஸ்துவ முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் பெர்னாண்டோ பேசுகையில்,, ''மருத்துவப் பல்கலைக் கழகம், சட்டப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த மார்க்கபந்து, ''சங்க கால ஆட்சிமுறை போன்றே புரட்சித் தலைவரின் ஆட்சிமுறையும் விளங்குகிறது. உணவு வழங்கும் திட்டம் மற்ற மாநிலங்கள் எல்லாம் பின்பற்ற வேண்டிய திட்டமாகும்'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு.அய்யணன் அம்பலம், ''தமிழுக்கு ஆபத்து, சரிவு ஏற்பட்ட போதெல்லாம், மதுரை அதனைக் காப்பாற்றி வந்திருக்கிறது. என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்ற வந்த முற்போக்கு முஸ்லிம் லீகைச் சேர்ந்த செங்கம் ஜபார்.


''தமிழகத்தில் அரசியல் கட்சிகளில் பல வண்ணங்கள்-எண்ணங்கள் இருக்கலாம். ஆனால் புரட்சித் தலைவர் தமிழ்த்தொண்டு செய்கிறார் என்பதில் ஒருமித்த கருத்து அனைத்துக் கட்சிகளுக்கும் உண்டு'' என்று தெரிவித்தார்.

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அழகிரிசாமி,
''இளங்கோ ஒரு காப்பியத்தை எழுதினார். மூவேந்தரும் ஒரு குடையின்கீழ் இருக்கவேண்டும் என்பதைத்தான் அதில் குறிப்பிட்டார். இந்த ஒற்றுமைக்கு வித்து இடப்படும் இடம் மதுரை. நிச்சயமாக இது புரட்சித் தலைவர் அவர்களின் பெருஞ்சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்'' என்று தெரிவித்தார்.

அடுத்து, அகில இந்திய பார்வர்டு பிளாக்கைச் சேர்ந்த ஆண்டித்தேவர்,



சொர்ணமுகி நாட்டியம்



“ஆங்கில ஆட்சியின்போது தமிழ் அடிமையாகியது போல எதிர் காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது. அதற்குரிய நடவடிக்கைகளைப் புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன்,

''வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் ஐயம் தீர்க்கும் மையம் ஒன்று தேவை. தமிழக ஏடுகளில் வெளிவரும் பிழைகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதற்குப் பிழை தீர்க்கும் கிழமை ஏடு ஒன்று தேவை'' என்று குறிப்பிட்டார்.

ஜனதா கட்சியைச் சேர்ந்த ஏ.எஸ்.ஏ. ஆறுமுகம், ''தமிழ் நாட்டில்உள்ள தமிழறிஞர்களுக்கு அனைத்து நாட்டு மொழிகளையும் கற்பித்து, அவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி, தமிழைக் கற்பிக்க வேண்டும்”என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் திரு ப.மாணிக்கம், ''வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் பல நாடுகளுக்குச் சென்று வாழ்ந்து வரும் தமிழர்களைப் பற்றிய செய்திகள் நூல்வடிவில் வெளியிடப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

திராவிடர் கழகத்தைச்சேர்ந்த திருவாரூர் திரு கே. தங்கராசு உரையாற்றுகையில்,“தேசிய நூல் இல்லை. அது திருக்குறளாக இருக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் திரு.எம். பழனியாண்டி உரையாற்றுகையில்,

''இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் தமிழ் இலக்கியங்கள் வெளிவரவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 6 மணியளவில் மதுரை சோமு குழுவினரின் இன்னிசையுடன் தொடங்கியது.

அடுத்த நிகழ்ச்சி தொடங்கப்பட இருந்தது. அனைவரும் எங்கள் முதல்வரை எதிர்நோக்கியிருந்தார்கள். உலகத் தமிழ்ச் சங்கத்தை அவர் தொடங்கிவைப்பதற்குள் மற்றொரு கடமையைத் தமுக்கத்தில் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

சங்கப் புலவர்கள் நினைவுத் தூணை எங்கள் முதல்வர் திறந்து வைத்தார். புலவர்கள் வாழ்ந்த இடத்தில் அவர்களுக்கு நினைவுத் தூண் எழுப்பப்பட வேண்டும் என்பது அவரது குறிக்கோள்.

அறுபட்டை வடிவம் கொண்ட இந்த நினைவுத் தூணில் மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர் 62 பேர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுள் பத்துப் புலவர்களின் பாடல்களில் சில வரிகளும் இடம் பெற்றிருந்தன. தமுக்கம் கலை அரங்கின் தலைவாயிலில் உள்ள தமிழ் அன்னை சிலைக்கு வலப்புறத்தில் நிறுவப் பட்டுள்ள இந்த நினைவுத்தூண் 14 அடி உயரமும் 5அடி அகலமும் கொண்டதாகும்.

நினைவுத் தூணைத் திறந்து வைத்த முதல்வர் சரியாக இரவு 7.40 மணிக்கு, உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நடைபெறும் மேடைக்கு வந்தார். அதன்பின் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா முறையாகத் தொடக்கம் ஆகியது.

மதுரை மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராசுலு, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாரதியார் கனவு கண்டார். அந்தக் கனவு நனவாகும் வகையில் நமது முதல்வர் அவர்கள் உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடக்கி வைக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

தொடக்க விழாவிற்கு எங்கள் கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமை ஏற்றார்.



சந்திரா தண்டாயுதபாணி குழுவினர் நடனம்



''மதுரை மாநகரில் 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்புற நடத்தி, தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவிய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் இன்று உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் தொடங்கி வைக்கிறார். உலகத் தமிழ்ச் சங்கம் நூல்களை ஆயும் நிறுவனமாக மட்டும் இருக்கப் போவதில்லை, தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்க — தமிழர்களிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இது பயன்படும். தமிழை உலகமொழியாக ஆக்குகின்ற அந்தஸ்தை முதல்வர் வழங்குகிறார்'' என்று தெரிவித்தார் கல்வி அமைச்சர்.

எங்கள் செய்தி — அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள், தமது உரையில்,

உலகத்தில் 55 நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். 33 பல்கலைக் கழகங்களில் தமிழ் ஆய்வு செய்யப்படுகிறது. தமிழ் உயர் தனிச் செம்மொழி. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் 5 கோடிப் பேர். இவர்களில் 1 கோடிப் பேர் தமிழகத்தை விட்டு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் துன்பம் துடைப்பதற்கு —அவர்களுக்கு ஆபத்து வரும் போது அதனை நீக்குவதற்கு இந்தச் சங்கம் அமைகிறது'' என்றார்.

பாண்டித்துரைத் தேவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 4 ஆம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் திரு. முத்து மலைச்சாமி பேசுகையில், புதிய தமிழ்ச் சங்கம் உருவாகியிருப்பது தமிழின் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும்'' என்று குறிப்பிட்டார்.

முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் உரையாற்றுகையில்,

''ஒன்றே குலம் ஒருவனே தேவன் யாதும் ஊரே யாவரும் கேளிர் என 4 சொற்களை உலகம் வியக்கச் சொன்னவன் தமிழன். அந்தத் தத்துவங்களைத் தந்த தமிழைப் பாதுகாப்பது தமிழர்களின் கடன்'' என்றார்.

திருக்குறளார் வீ. முனிசாமி உரையாற்றுகையில், ''உலகத்தை முன் நிறுத்தி உயர்ந்த அறங்களைச் சொன்னவன் தமிழன்'' என்று கூறினார்.

இலங்கைத் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், ''தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டியது உலகத் தமிழ்ச் சங்கத்தின் கடமையாகும் என்றார்.

சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் உரையாற்றுகையில்,

''தமிழ் இலக்கியத்தில் உலகு என்ற சொல் தொடக்கச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அது மங்கலச் சொல் மட்டுமல்ல — மானச் சொல்லும் ஆகும்.




''தமிழர்கள் அனைவரையும் தமிழ் மூலம் ஒன்று படுத்துகிறோம் — அரசியலால் அல்ல! தமிழை இழக்காமல் தமிழன் உலகத்தோடு இருப்பான். சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் உருவில் அமர்ந்து உலகத் தமிழ்ச் சங்கத்தை நமது முதல்வர் தொடங்கி வைக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது உரையில்,

''உலகத்தில் மனித இனச் சிக்கல்களை நீக்குவதில் தமிழ் போல் வேறெம் மொழியும் வெற்றி பெறவில்லை'' என்றார்.

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில், பொற்பூ உள்ள தங்கச் சங்கிலியை அவருக்கு அணிவித்தார் எங்கள் முதல்வர்.

உலகத் தமிழர்களின் சார்பில், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயத் தக்கார் திரு பொன்னுசாமி, முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி 2 கிலோ எடையுள்ள பொற்றாமரையை வழங்கினார்.

தமக்குச் செய்த மரியாதையை ஏற்றுக் கொண்ட வாரியார் நன்றி தெரிவிக்கும் வகையில் தமது ஏற்புரையை வழங்கினார்.

''தமி என்றால் துணையின்றித் தானே இயங்குவது என்று பொருள். தமிழ் என்பது வேறொரு மொழியின் துணையின்றி, தானே இயங்க வல்லது. தமிழ் என்னும் சொல் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழ் படித்தால் பண்பாடு வந்துவிடும்'' என்று தெரிவித்தார் வாரியார்.


எங்கள் நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் உரையாற்றுகையில் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் தமிழ் வளர்ச்சி பெற்று வருவதைப் பட்டியல் போட்டுக் கூறினார்.

''தமிழுக்கெனத் தனித் துறையை உருவாக்கினால் தான் தமிழ் வளர வேண்டிய முறையில் வளரும் என்ற எண்ணத்துடன் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறையை முதல்வர் அமைத்துள்ளார்.

''அரசாங்கத்தின் செயல் முறைகளில் உருவாக்கப்படும் கோப்புகள் அனைத்தும் தமிழ் மொழியில் தான் நகர வேண்டும் என்று சட்டமிட்டார்.

''அரசு அதிகாரிகள் தமிழில் தான் கையொப்பமிட வேண்டும் என்று ஆணையிட்டார்.

''பெயர்ப் பலகை, விளம்பரப் பலகை ஆகியவற்றில் முதல் பெயர் தமிழாகத்தான் இருக்க வேண்டும். கீழே வேறு மொழிகள் இடம் பெறலாம் என்று ஆணை பிறப்பித்தார்.



"வேற்று மொழிப் படங்களைத் திரையிட்டு வரும் திரையரங்குகள் குறிப்பிட்ட காலத்திற்குத் தமிழ்த் திரைப்படங்களைத் திரையிட வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தார்.

"தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்று அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்.

"சிறந்த தமிழ் மொழி பெயர்ப்புகளுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

"சான்றோர்களின் பிறந்த நாள் விழாக்களையும் நூற்றாண்டு விழாக்களையும் கொண்டாடி வருகிறார்.

"வறுமையில் வாடும் தமிழ்ப் புலவர்கள் வாட்டம் கொள்ளக் கூடாது என்ற வகையில் 250க்கு மேற்பட்ட தமிழ் அறிஞர்களுக்கு மாதம் ரூ. 250 நிதி உதவி அளித்து வருகிறார்.

"தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழகத்தில் அமைய வேண்டுமென்று தமிழவேள் உமாமகேசுவரனார், ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் கண்ட கனவை, முதல்வர் நனவாக்கியுள்ளார், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியிருப்பதன் வாயிலாக!

"நாட்டில் திருக்குறள் நெறி பரப்பப்பட வேண்டும் என்ற வகையில் குறள் நெறி பரப்பு மையத்தை உருவாக்கியுள்ளார்.

"பழங்கலைகளைக் காப்பதற்காகப் பழங்கலை இயக்ககத்தை உருவாக்கியுள்ளார்.

"மன்னர் ராஜராஜனின் 1,000-மாவது முடிசூட்டு விழாவையொட்டி, தஞ்சையில் முடிசூட்டு விழாவை மறைந்த பிரதமரைக் கொண்டு நடத்தியிருக்கிறார்.

"சிறந்த கவிஞருக்கு ஆண்டு தோறும் தங்கச் சங்கிலியும் 10 ஆயிர ரூபாய் தொகையும் கொண்ட பாவேந்தர் விருதினை அளித்து வருகிறார்.

"சிறந்த எழுத்தாளர்க்கு ஆண்டு தோறும் அண்ணா பிறந்த நாளில் திரு.வி.க. விருது வழங்கி வருகிறார்.

"சிறந்த தமிழ்ப் படங்களுக்குப் பரிசுத் தொகை — உதவித் தொகை ஆகியவற்றை ஆண்டு தோறும் வழங்கி வருகிறார்.

"சிறந்த நாடகங்களுக்குப் பரிசு வழங்கி வருகிறார்.



ஐந்திரம் நூலை வெளிக்கொணர்ந்த புலவர் வீரபத்திரனுக்குப் பொன்னாடை அணிவிக்கிறார் முதல்வர்.

"மதுரையில் வாழ்ந்த சங்கப் புலவர்களுக்கு அவர்களது பெயர்கள் பொறித்த நினைவுத் தூண் ஒன்றை அமைத்திருக்கிறார்."

— என்று எங்கள் முதல்வரின் தமிழ்த் தொண்டுகளை நாவலர் தொகுத்துச்சொன்னதைக்கேட்டு, அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர்கள் அனைவரும் உற்சாகமடைந்தார்கள். இத்தனை தொண்டுகளா என்று வியந்து போற்றினார்கள்.

உலகத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கத்தைக் குறித்தும் எங்கள் நிதி அமைச்சர் விவரித்தார்.

"இந்த உலகத் தமிழ்ச் சங்கம் உலக நாடுகளை அளாவி நிற்கும்; பிற மாநிலங்களை அளாவி நிற்கும். அங்குள்ள தமிழர்களை ஒருமனப்படுத்தி அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்தும்; தமிழ் இலக்கியச் சிந்தனையை-தமிழ்ப் பண்பாட்டை நிலைபெறச் செய்வதுடன் தமிழைப் பரப்புவதும் இதன் தொண்டாகும். சிறந்த நாடகத்தை, நாட்டுப் புற இயலை, மருத்துவக் கலையை உலக நாடுகளுக்கும் பிற மாநிலங்களுக்கும் அறிமுகப்படுத்துவதற்குத் துணை புரிவது இச்சங்கத்தின் நோக்கமாகும்.

"தமிழ் கற்க, பேச விரும்பும் பிற மாநிலத் தமிழர் அல்லாதவர்களுக்கு நூல்கள் தந்து உதவும்.

"தமிழாசிரியர்களை அனுப்பி வைக்கும்.

"பதிவு நாடா, வீடியோ தொலைக் காட்சி மூலம், தமிழைப் பரப்புவதும் இதன் நோக்கங்களில் ஒன்று.

'உலகத் தமிழ்' என்ற இதழையும் வெளியிடும்.

"தமிழ்க் கலைஞர்களைப் பிற நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்.

"தனிப் பெரும் நூல் நிலையம் ஒன்றை அமைக்கும்.

"இனி உலகில் நடைபெறப் போகும் உலகத் தமிழ் மாநாடுகளை இந்த உலகத் தமிழ்ச் சங்கம்தான் நடத்தும்.

"என்றென்றும் இதன் காப்பாளராக முதல்வர் புரட்சித் தலைவர் விளங்குவார்.

"செயற்குழு, பொதுக்குழு மாநில அளவிலும் உலகம் தழுவிய அளவிலும் அமையும்."

உலகத் தமிழ்ச் சங்க நூலகத்தில் இடம் பெறுவதற்குரிய புத்தகங்களைச் செய்தி அறநிலையத் துறை அமைச்சர், கல்விஅமைச்சர், அரசுக் கவிஞர் மற்றும் பல பெருமக்கள் எங்கள் முதல்வரிடம் வழங்கினார்கள். அதன் பின்னர் வெளிநாட்டிலிருந்து வந்த தமிழரல்லாத - ஆனால் தமிழ் கற்றுவருகின்ற பிரதிநிதிகள் சிலர், எங்கள் முதல்வருக்கு மாலை யணிவித்து மனமகிழ்ச்சி பெற்றார்கள்.

ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஹெவோஸ் ரொமாடிகா முதல்வருக்கு மாலையை அணிவித்து விட்டு, தனது மன நெகிழ்ச்சியை மக்கள் மன்றத்தின் முன்னே வார்த்தை வடிவில் எடுத்துச் சொன்னார். தமிழை வெளி நாட்டார் பேசும்போது அதிலும் ஓர் இன்பம் இருக்கத்தான்செய்கிறது. ஜப்பான்காரர் பேசியதை நீயும் அறிந்துகொள்ள வேண்டுமல்லவா, அவரது வாசகத்தை இங்கே குறிப்பிடுகிறேன்.

"நான் நாலரை வருடங்களாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் சங்க இலக்கியத்தில் இந்து சமயத்தின் நிலை பற்றி ஆய்ந்து வருகிறேன்.

"ஜப்பான் மொழியில் எழுத்துகள்கூட இல்லாத நிலை இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் தமிழர் உயர்ந்த ஆன்மிகத் தன்மையில் வாழ்ந்து வந்ததை அறிந்து ஆச்சரியப்படுகிறேன்.

"தமிழ்ப் பண்பாட்டை, ஆராய அதனைப் பரப்ப இந்தச் சங்கம் தொடங்கப்படுவது நியாயமானது. இது மேலும் சிறந்து வாழ வாழ்த்துகிறேன்."

4ஆம் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத் தேவ





ரின் அண்ணனின் பேரனான திரு ராஜேந்திரன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்புச் செய்தார் எங்கள் முதல்வர்.

பின்னர் 'ஐந்திறம்' என்னும் நூலையும், மதிவாணன் எழுதிய 'அரசும் தமிழும்' என்ற நூலையும், கவிஞர் புத்தனேரி சுப்ரமணியம் எழுதிய கவிதை நூலையும், மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 'தமிழ்ப் பாவை என்ற இதழையும் எங்கள் முதல்வர் வெளியிட்டு, நூலாசிரியர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார்.

பின்னர் உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார். முதல்வர் பொத்தானை அழுத்தியதும் திரை விலக, உள்ளே, தாமரை மலர் காட்சி தர, அதன் மேலே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முழக்கம் கொண்ட உலகப் பந்து சுழன்று வர, நாதசுர இசை பின்னணியில் முழங்க அக்காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

எழுச்சி சேர்த்த இந்த விழாவில் எங்கள் முதல்வர் அவர்கள் இனிய உரையாற்றினார். அவரது உரையை இங்கே குறிப்பிடுகிறேன்.

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்க்குலமே, என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே, என் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன் பிறப்புக்களே; தமிழ் அறிஞர் பெருமக்களே!

''நம்முடைய நீண்ட நாள் கனவு நனவாகிறது. சங்கம் வளர்த்த மாமதுரையில் இன்று உலகத் தமிழ்ச் சங்கம் அமைகிறது. தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டு சிறப்புடன் இயங்கி வருகிறது. இன்று மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் தொடங்கப்படுகிறது. நம்முடைய விருப்பங்கள் செயல்வடிவம் பெற்றதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்.

''இன்று தொடங்கும் தமிழ்ச் சங்கம் சங்ககாலத்தமிழ்ச்சங்கத்தின் மறுவடிவம் என்றே கொள்ளல் வேண்டும். இது என்றும் புகழ்பட நின்று நிலவிட வேண்டும்.

''தமிழ் மொழி வளர்ச்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் இச்சங்கம் பொதுவானது.

''இதில் அரசியல் புக இடமில்லை. மீண்டும் சொல்கிறேன் - இதில் அரசியல் புக இடமில்லை.

''தமிழ்க் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு மற்றும் தமிழ் நாகரிகம் இவற்றின் பெருமைகளை உலகம் முழுவதும் பரப்புவதே இச்சங்கத்தின் பணி.

'தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ்வர்; தமிழ் நாடும் வாழும்' என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

''தமிழர், வாழ்வில் வளம்பெறவும், இச்சங்கம் பாடுபடும். தமிழ்க் கலை, சிற்பம், கலாச்சாரம், இலக்கியம் இவை எல்லாம் நமது ஆற்றலுக்குச் சிறந்த சான்றுகள்.

''காலத்தால் அவை இன்று தூசு படிந்தும் சிதைந்தும் கீறல்கள் விழுந்தும் காணப்படுகின்றன. அவற்றை நீக்கி தமிழ்க்கலாச்சாரம், பண்பாடு. நாகரிகம் இவற்றின் உண்மையான வடிவத்தையும், பெருமைகளையும் நாம் நிலைநாட்ட வேண்டும் என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

''அந்த உன்னதக் குறிக்கோளை நிறைவேற்றவே இந்த உலகத் தமிழ்ச் சங்கம் பிறக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, தொடங்கி வைக்கிற அரிய வாய்ப்புக்கு நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

''உலகத் தமிழ்ச் சங்க அமைப்புப் பணிக்கு 10 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 10 கோடி ரூபாய்க்கு மேல் எவ்வளவு செலவானாலும் அதை அரசு ஏற்றுக்கொள்ளும்.

''இந்தச் சங்கத்தை உலகத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி-வணக்கம்.''

உரையை நிகழ்த்திய முதல்வர் மேடையை விட்டு இறங்கி வந்து, அரங்கின் முன்னே பார்வையாளர் வரிசையில் அமர்ந்துவிட்டார். அடுத்து நடைபெற்ற திருமதி சந்திரா தண்டாயுதபாணி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியைக் கண்ணுறுவதில் அவர் ஆர்வம் காட்டினார். சில விநாடிகளுக்குள்ளேயே நாட்டியம் தொடக்கமாகிவிட்டது. இந் நிகழ்ச்சியுடன் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிறைவு பெற்றது.

இன்னொரு செய்தி! நீ முன்பு அனுப்பிய வீடியோ கருவியின் உதவியால், தமிழ்ச் சங்க விழாக் காட்சிகளை என் கணவர் படமாக்கியுள்ளார். அதன் பிரதி ஒன்றினையும் உனக்கு அஞ்சலில் அனுப்பி இருக்கிறேன்.

வளமார் தமிழுக்கு வாழ்வு தரும் உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழா நிகழ்ச்சிகளை நீ கண்ணாரக் கண்டு, மனமார மகிழ்ந்து, வாயாரப் போற்றுவாய் என்பது எனது எண்ணம். விழா நிகழ்ச்சிகள் உனக்குப் புதிய உற்சாகத்தைத் தருவது திண்ணம்!

உன் அன்புத் தோழி,
**செந்தமிழ்ச் செல்வி.**



# தமிழகத்தில் குடும்பநலத் திட்டச் சாதனை

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
டாக்டர் எச். வி. ஹண்டே

குடும்பநலத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி நல்ல பல வெற்றிகளை ஈட்டிய ஒரு மாநிலமாகத் திகழ்கிறது தமிழ் நாடு. தேசியத் திட்டமாகக் குடும்பநலத்திட்டம் அறிவிக்கப்பட்டு, இந்தியாவில் செயல்படுத்தத் துவக்கிய காலத்திலிருந்து தமிழகத்தில் இத்திட்டம் வெற்றி நடை போட்டு வருகிறது. திட்டம் இன்று தமிழகத்தில் வெற்றி பெறுவதற்குரிய அடிப்படையான காரணங்களில் மிக முக்கியமானதாக, ஏன் முழு முதற் காரணமாக இருப்பது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் மிகுந்த தொலை நோக்கோடு 1920-30ஆம் ஆண்டு களிலேயே மக்களிடையே இத்திட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்துப் பிரசாரம் செய்து சமுதாயம் இத்திட்டத்தை ஏற்கின்ற அளவுக்கு மக்கள் மனநிலையில் மாற்றத்தை உருவாக்கியதுதான் என்று சொல்லலாம்.

கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக வெற்றி பெற்று வருகிறது. தமிழகத்தின் தளநாயகராக இருப்பவரும், மக்களுடைய உள்ளங்களிலே நீங்கா இடம்பெற்றிருப்பவருமான மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மக்களிடையே பெற்றிருக்கும் தனிச் செல்வாக்கு இத்திட்ட வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது என்று கூறலாம்.


வெற்றிநடை போட்டுவரும் குடும்பநலத் திட்டம் மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியுடன் தமிழகத்திலே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலிருக்கும் பல்வேறு மாநிலங்களைவிடத் தமிழகம் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முன்னணியில் இருக்கிறது. மிகச் சிறந்த முறையில் திட்டச் செயலாக்கம் தமிழகத்தில் இருப்பதனால் வேறு பல மாநிலங்களும் மத்திய அரசும் தமிழகத்தைப் பாராட்டி வருகின்றன.

தமிழகத்தில் குடும்பநலத் திட்டம், மக்கள் தாங்களே முன்வந்து தன்னிச்சையாக ஏற்கும் ஒரு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசியல் கட்சிகளும், பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களும், தன்னியக்க நிறுவனங்களும், மகளிர் நிறுவனங்களும், அரசு ஊழியர்களும் இத்திட்டச் செயலாக்கத்திற்குத் தங்கள் முழு ஒத்துழைப்பை நல்கி வருவது குடும்பநலத்திட்டம் தமிழகத்தில் ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி வருகிறது என்பதைக் காட்டுகிறது. மேலும், திட்டமிட்டுக் குடும்பத்தை அமைத்துக் கொள்வதை மக்கள் வாழ்வின் ஒரு கூறாகவே ஏற்றுக் கொண்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். நடப்பு ஆண்டு 1986 ''திட்டமிட்ட குடும்ப ஆண்டு'' என அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1981ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ் நாட்டின் மக்கள் தொகை 4.84 கோடி ஆகும். 1971ஆம் ஆண்டு முதல் 81ஆம் ஆண்டுவரை தமிழகத்தில் ஏற்பட்ட மக்கள் தொகை வளர்ச்சி 17.5 சதவிகிதம் ஆகும். இதே கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள தேசியமக்கள் தொகை வளர்ச்சி 25 சதவிகிதமாகும். அனைத்திந்திய சராசரியைவிட தமிழகத்தின் மக்கள் தொகை வளர்ச்சி 7.5% குறைவாக ஏற்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அதே போல தமிழ்நாட்டினுடைய பிறப்பு விகிதம் 1000க்கு 26.1 என்றும், இறப்பு விகிதம் 1000க்கு 10.9 என்றும் குறைந்திருக்கிறது. ஆனால் தேசிய அளவில் பிறப்பு விகிதம் 1000க்கு 33.9 என்றும், இறப்பு விகிதம் 1000க்கு 12.5 என்றும் ஆனது. தேசியப் பிறப்பு விகிதத்தைவிட தமிழ்நாட்டின் பிறப்பு விகிதம் 1000க்கு 7.8 அளவுக்குக் குறைவாக இருப்பது, மக்களிடையே செல்வாக்குமிக்கவராய் இருக்கும் புரட்சித்தலைவர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் தமிழகத்தில் குடும்பநலத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய தன் பயன் என்று கூறலாம். கி.பி.2000 முடிவதற்குள் பிறப்பு விகிதத்தை 1000க்கு 21 என்றும், இறப்பு விகிதத்தை 1000க்கு 9 என்றும் குறைக்க வேண்டுமென்பதும், அதே சமயத்தில் 60 சதவிகித தகுதிவாய்ந்த தம்பதியர்களைக் குடும்பநலத்திட்ட முறைகளை அனுசரிக்கச் செய்ய வேண்டும் என்பதும், குழந்தைகள் மரண விகிதத்தை 1000க்கு 60 என குறைக்க வேண்டும் என்பதும் தேசிய இலக்கு ஆகும். இந்த இலக்குகளையெல்லாம் தமிழ்நாடு 1989-90ஆம் ஆண்டுக்குள்ளாகவே எட்ட வேண்டும் என்ற நோக்கில் குடும்ப நலத்திட்டம் தமிழகத்தில் போர்க்கால குணத்தோடு அவ்வளவு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வளரும் தமிழகம்:

1956ஆம் ஆண்டு முதல் குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 42.47 இலட்சம் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளைச் செய்து முடித்திருக்கிறது. மகாராஷ்டிர மாநிலம் 69.83 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளையும், ஆந்திரமாநிலம் 44.94 இலட்சம் நிரந்தரச் சிகிச்சைகளையும் செய்து முடித்து, தமிழகத்தைவிட அதிகமாக நிரந்தரச் சிகிச்சைகளைச் செய்த மாநிலமாகத் திகழ்கின்றன. இந்த இரண்டே மாநிலங்கள் தான் தமிழகத்தைவிட அதிகமாகச் செய்திருக்கின்றன என்றாலும், மகாராஷ்டிர மாநிலமும், ஆந்திர மாநிலமும் தமிழ்நாட்டைவிட அதிகமான மக்கள் தொகையை உடையனவாய் இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும். இந்த இரண்டு மாநிலங்களைத் தவிர, தமிழ்நாட்டைவிட மிகப் பெரிய மாநிலங்கள் என்று




சொல்லத் தக்க மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் உள்ளிட்ட மற்ற மாநிலங்கள் எல்லாம், தமிழகத்தைவிட மிகக் குறைவாகவே குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகளைச் செய்து முடித்து இருக்கின்றன. குடும்பநல நிரந்தரச் சிகிச்சை நிறைவேற்றத்தில் தொடர்ந்து சாதனைகளை உருவாக்கி வந்த தமிழ்நாடு, 1984-85ஆம் ஆண்டு மிகப் பெரிய சாதனையை ஏற்படுத்தி, அதற்காக இந்திய அரசிடமிருந்து தேசியவிருதாக ரூ.2.5 கோடி ரூபாயைப் பரிசாகப் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடும்பநலத் திட்டம் வெற்றியடைவதற்கு அடிப்படையாக அமைவது மக்களுடைய ஒத்துழைப்பு ஆகும். மக்களிடையே காலங்காலமாக இருந்துவரும் நடைமுறைப் பழக்கவழக்கங்கள் (Attitude and behaviour) அதன் வழி உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துள்ள எண்ணங்கள் இவற்றையெல்லாம் மாற்றித் திட்ட ஆதரவாளர்களாக அவர்களைத் திருப்ப வேண்டும். முழுமனத்துடன் கூடிய மக்கள் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமானால் இந்தப் பணியை அவசியமாகத் தொய்வில்லாமல் செய்தேயாக வேண்டும். புதிது புதிதாகச் சமுதாயத்தில் சேர்ந்து கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவரும் திட்டமிட்டுக் குடும்பங்களை அமைத்துக் கொண்டாலன்றி திட்டம் வெற்றி பெறாது. எனவேதான் குடும்பநலத்துறையின் மிக முக்கியமான பணியாக இருப்பது மக்களுக்குத் தகவல்களை எல்லாம் தந்து இவ்வகையிலான கல்வி அளித்து மனமாற்றம் ஏற்படுத்தி, திட்டத்திற்கு ஆக்கம் தேடுவதே ஆகும்.

குடும்பநல விளம்பரப்பணிகளை முடுக்கி விடுதல், விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளுதல், சேவைப் பணிகளை விரிவாக்குதல், பின் கவனிப்புப் பணிகளைக் கட்டுக் கோப்பாக மேற்கொள்ளுதல் மற்றும் தாய் சேய் நலப் பணிகளைக் கவனத்துடன் நிறைவேற்றுதல் ஆகிய ஐம்பெரும் பணிகளை அடிப்படையாகக் கொண்டு, புதிய புதிய உத்திகளுடன் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. குறிப்பாகச் சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்களிடையே ஒரே மாதிரியான கருத்தை எடுத்துச் சொல்லாமல், அவரவர்களது தொழில், வாழ்க்கை முறை ஆகிய பின்னணிகளைக் கருத்தில் கொண்டு பொருத்தமான முறையில் செய்திகள் ( Audience Specific Messages ) தயாரிக்கப்பட்டு திட்டம் பரப்பப்பட்டு வருகிறது. அதாவது, விவசாயிகளுக்கென்றும், தொழிலாளர்களுக்கென்றும், அரசு ஊழியர்களுக்கென்றும் இப்படி ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏற்றவகையில், வகைவகையாகச் செய்திகள் தயாரிக்கப்பட்டு திட்டக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றன.

சிறப்பாக திரைப்படங்கள், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள் போன்றவை மூலம் திட்டம் பரப்பப்பட்டு வருகிறது. குடும்பநலக் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துரைக்கும்திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ. 1 இலட்சம், இரண்டாவது பரிசு ரூ.50,000 மூன்றாவது பரிசு ரூ.25,000 எனவும், குடும்பநலப்பிரச்சார நாடகங்களுக்கும் முதல் பரிசு ரூ.15,000, இரண்டாவது பரிசு ரூ. 10,000 என்றும் அரசு தெரிவித்துள்ளது. அரசே 11 குடும்பநலத் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது. மேலும் கிராமப் புறங்களில் செல்வாக்குப் பெற்ற கிராமத் தலைவர்களுக்கென குடும்பநலத் திட்டப் பயிற்சி முகாம்களை நடத்தித் திட்டத்திற்கு ஆக்கம் தேடப்பட்டு வருகிறது.

இதுபோன்ற இன்னும் பல்வேறு நடவடிக்கைகள் திட்ட மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் காரணமாக நடப்பு ஆண்டின் திட்ட இலக்கையும் விஞ்சக் கூடிய அளவுக்குச் சாதனை ஏற்படுத்த அனைத்து மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்!

(சென்னைவானொலியில் 16.3.86ல் ஆற்றிய உரை.)

# சுற்றுலாப் பொருட்காட்சியில் பரிசு பெற்ற அரங்குகள்





சென்னையில் சுற்றுலா, தொழில் பொருட் காட்சியின் நிறைவு விழா 20.4.86 அன்று நடைபெற்றபோது, சிறந்த அரங்குகளுக்குரிய பரிசுகளை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் வழங்கினார்.

அரசுத்துறை - ஏ பிரிவு

முதற் பரிசு - இந்து சமய அறநிலையத்துறை









இரண்டாம் பரிசு - தீயணைப்புத்துறை

மூன்றாம் பரிசு - கால்நடை பராமரிப்புத்துறை





## அரசுத்துறை - பி பிரிவு

இரண்டாம் பரிசு - அரசு புனர் வாழ்வு மருத்துவ நிலையம்





## மாவட்ட அரங்குகள் முதற் பரிசு - சேலம் மாவட்டம்






## இரண்டாம் பரிசு - மதுரை மாவட்டம்





## மூன்றாம் பரிசு - பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்





குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு -32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

# நட்புக்கு நட்பு

—கோமகள்

“இன்னிக்கு நான் புறப்பட்டு அடையார் வரை போய்ட்டு வரேன் கமலம்!'' கல்யாண ராமன் சலவை உடைகளை உடுத்தியவாறே கூறினார்.

''நாளைக்குப் போகக் கூடாதா?'' மெல்ல மொழிந் தாள் சங்கரி.

''என்ன நீ! டில்லியை விட்டு மெட்ராஸ் வந்து ஒரு மாசமா குது. வாடகைக்கு விட்டிருந்த நம்ம வீட்டை மறுபடியும் வெள் ளையடிச்சு, பெயின்ட் பண்ணி சமையலறையிலே மேடை கட்டி அம்மி கல்லுரலை நிர்மாணம் பண்ணியாச்சு! தோட்டத்திலே யும் முருங்கை, வாழை, மாமரம் எல்லாம் வச்சாச்சு. குரோட் டன்ஸ் தொட்டிகளையும் வரி சையா அமர்த்தியாச்சு. இன் னும் என்ன குறை? மனிதனைக் கொஞ்சம் வெளியே போக விடேன்...''

''சரி சரி! இனிமே நீங்க நிக்க மாட்டீங்க, புறப்படுங்க'' வாசல் வரை வந்து கணவனை வழியனுப்பி விட்டு கதவைச் சாத்திக் கொண்டாள் கமலம்.

கடற் காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது.


டில்லியில் பனிக்காற்று வீசும் போது, உடம்பைப் பொத்திப் போர்த்திக் கொண்டுதான் புறப் படணும்.

பஸ்ஸைப் பிடித்து அடையா ரில் வந்து இறங்கினார்.

காந்தி நகரின் நாலாவது தெரு வுக்கு நடந்தவாறே சங்கர மூர்த்தியின் வீட்டு எண்ணைத் தேடினார்.

உலாவப் புறப்பட்ட சங்கர மூர்த்தி வீட்டு வாசலில் நிற் கவே, இவர் ''சங்கரா!'' என்ற வாறே குரல் கொடுத்தார்.

''கல்யாணமா? வாடா. . . . சௌக்கியமா! டில்லியிலே



இருந்து எப்போது வந்தே? நாலு நாள் இருப்பியா, ரெக்கையை கட்டிகிட்டுப் பறக்கப் போறியா?'' வீட்டுப் படியிறங்கி வந்து கல்யாணராமனின் கைகளைப் பற்றிக் கொண்டார் சங்கரமூர்த்தி.

''இனிமேல் ரெக்கையாவது ஒண்ணாவது? ரிட்டயர்ட் ஆயாச்சுடா! பெசன்ட் நகர்லேதான் ஒரு பிளாட் வாங்கிப் போட்டிருந்தேன். இப்போது அங்கே வந்து குடியேறியாச்சு.''

''வா உள்ளே உட்காரலாம்.'' என்ற சங்கரமூர்த்தி, ''அனுசுயா! வந்துட்டுப் போ!'' என்று குரல் கொடுத்தார்.

அனுசுயா கல்யாணராமனைக் கண்டதும் முந்தானையால் முதுகைப் போர்த்திக் கொண்டாள்.

''அடிக்கடி சொல்வேனே..என் நண்பன் கல்யாணராமன்!''

''வாங்க! உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்கார். ஒரு நாள் வீட்டிலே எல்லோரையும் அழைச்சுகிட்டு வரணும்.''

''சரி, வளவளன்னு பேசிகிட்டிருக்காம, டிபன் காபி கொண்டு வா! ஸ்ட்ராங் டிகாக்ஷன் போடு!'' என்று கூறிய சங்கரமூர்த்தி நண்பனைப் பார்த்துச் சிரித்தார்.

''சரி சரி! கல்யாணம், இப்பச் சொல்லு. எப்படியிருக்கு உன்னோட ரிட்டயர்ட் லைப்? உடம்புக்கு டயாபடீஸ், ப்ளட் பிளஷர், அல்சர்னு ஒண்ணுமில்லாமே இருக்கியா? குழந்தைகள் சொன்ன பேச்சு கேக்கறதுகளா? இல்லே தான் தோன்றிகளா? எல்லா விஷயத்தையும் சொல்லுடா'' உற்சாகமாகக் கேட்டார் சங்கரமூர்த்தி.

''பகவான் கிருபையிலே, நீ சொன்ன எந்த வியாதிகளையும் நான் இன்னமும் சந்திக்கலைடா. இனிமேல் எப்படியோ? என் மனைவிக்கு மட்டும் டயாபெட்டீஸ் இருக்கு'' என்றார் கல்யாணராமன்.

''பரவாயில்லே! இந்த விஷயத்திலே நீ கொடுத்து வச்சவன் தான்! எனக்கு அல்சர் தொந்தரவு இருக்கு.''

''அடடா! நீ சின்ன வயசுலே நிறைய காரம் சாப்பிடுவியே அதனாலே. . .''

''அது உண்மை தான்! அதனாலே இப்பவும் வாய்கட்ட முடியறதில்லை. எப்பவும் கொஞ்சம்



காரம், மசாலா சேர்ந்தா தான் சாப்பாடு நாக்குக்கு ருசிக்கறது. சமயத்திலே வயத்துக்குள்ளே குடல்லே ஒரு வலி தோணும் பாரு, அப்படியே துடிச்சுப் போயிடுவேன்.''

''அப்படின்னா காரத்தைக் குறைச்சுக்க வேண்டியது தானே? நாக்குருசியை விட்டுத் தொலைச்சுடுடா!''

சங்கர மூர்த்தியின் முகம் வாடியது. ''ஆமாம்! அப்படித் தான் இருக்கணும். ஆனா இந்தப் பாழும் நாக்கு ருசியை என்னால் வெல்ல முடியலைடா.''

''சங்கரா! வருத்தப்படாதே. உணவுக் கட்டுப்பாட்டை கொஞ்சம் கொஞ்சமா ஏத்துக்கோடா.''

அனுசுயா டிபன் தட்டை கல்யாணராமன் எதிரில் வைத்தாள்.

மைசூர் பாகு மென்மையாக இருந்தது. ஒரு விள்ளல் வாயில் போட்டதுமே சுரீரென இனிப்புச் சுவை பொங்கி நாவின் ருசி மொட்டுக்களை மலர்த்தி மயக்கியது. அதைச் சரிக்கட்ட காரா பூந்தியை ஒரு வாய் போட்டுக் கொண்டதுமே, சற்று முன் இனிப்பால் மலர்ந்த நாவின் ருசி மொட்டுக்களை சுரீரென்று சுட்டுத் தீய்த்து, கண்களில் நீரைப் பொங்க விட்டது காரம். அவசரமாகத் தண்ணீரைத் குடித்ததும் புரை ஏற, தலையைத் தட்டிக் கொண்டார் கல்யாணராமன்.

''இவர் இனிப்பிலேயும் அதீதம். காரத்திலேயும் அதீதம். இதெல்லாம் இவர் ருசிக்கேத்த மாதிரி தான் பண்ணியிருக்கு'' மெல்லக் குரல் கொடுத்தாவாறே காபியை வைத்தாள் அனுசுயா.

டிபனைத் தள்ளி விட்டு காபியை ஒரு டம்ப்ளரில் கொஞ்சமாக ஊற்றிச் சுவைத்தவர், ''ஏண்டாப்பா சங்கரா! கசப்பிலேயும் நீ அதீதம் தானா?'' என்று காபியை தூரத் தள்ளினார்.

சங்கர மூர்த்தி சிரித்தார். ''ஸாரிடா! உனக்கேத்த மாதிரி என் வீட்டு டிபன், காபி அமையவில்லை. ஒரு நாள் உன்னைக் கூப்பிட்டு உப்பு, சப்பில்லாமே சமைச்சு விருந்து வைக்கிறேன். ஓ.கே?... உம்! உன்னை ஒண்ணு கேட்கணுமேடா. உன் பிள்ளைகள் சுந்தரும்,சுகன்யாவும் என்ன பண்றாங்க, இப்போ ?''

''சுந்தர் பொறியியல் படிக்கறான்.சுகன்யா மருத்துவம் படிக்கிறாள். ஆமாம்! மாலாவும் அருணும் என்ன பண்றாங்க?''

''நீ சொன்னதையே திருப்பிப் போடு! அருண் மெடிக்கல் படிக்கிறான். மாலா என்ஜினீயரிங் பண்றாள்.''

''அடேடே' !''-சங்கர மூர்த்தியின்கண்கள் மகிழ்வில் விரிவடைந்தன. தனக்குள் சிரித்த சிரிப்பு அவர் கண்களிலும், உதடுகளிலும் அப்பிக் கொண்டது.

''என்னடா சங்கர்! உனக்குள்ளே மகிழ்ந்து போறே?''

''ஒண்ணுமில்லைடா கல்யாணம்! நம்ப ரெண்டு பேருக்கும் ஒரே தேதியிலே கல்யாண மண்டபத்திலே திருமணம் நடந்ததே, அப்போது நாம் ஒரு திட்டம் போட்டமே ஞாபகமிருக்கா?''

''எனக்கு மறக்குமா சங்கர்?'' மீண்டும் பழைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்ப்பது போல் கூறினார் கல்யாணராமன்.

நண்பர்கள் இருவருக்கும் திருமணம் முடிந்த கையோடு கொஞ்ச நேரம் ஒய்வு கிடைத்தது.

அப்போது இளைஞன் சங்கர மூர்த்தி, இளைஞன் கல்யாணராமனைப் பார்த்து ''டேய்! கல்யாணம்! நம் ரெண்டு பேருக்கும் ஒரே திருமணப் பந்தல்லே, ஒரே நேரத்திலே திருமணம் நடந்திருக்கு. நாம் இப்போது நண்பர்கள். எதிர்காலத்திலே நாமே சம்பந்திகளாகிடணும். நான் சொல்றது புரியுதோ?'' என்றான்.

''புரியுது! யாரோ ஒருத்தி குழந்தை வரம் வேண்டி, அரச மரத்தைச் சுத்தினாளாம். உடனே அடி வயித்தைத் தொட்டுப் பார்த்துக் கிட்டாளாம். அது போல் இருக்குடா!''

''அந்த நம்பிக்கைதான் நமக்கு வேணும்டா! புரியுதோ?''

''உம்! உன் நம்பிக்கை வாழட்டும். அப்படியே ஆகட்டும்'' என்று ஒப்புக் கொண்டான் கல்யாணராமன்.

''என்னடா கல்யாணம்! பழைய நினைவுகளைப் புதுப்பிச்சாகிறதா?''

''ஆமாம். ஒரு சின்ன ஃபிளாஷ்!''

''அப்புறம் என்ன? நாம் நல்லாயிருக்கும்போதே பசங்களை மணப்பந்தல்லே சேர்த்து வச்சுப் பார்த்துட்டால், சீக்கிரமே பேரன் பேத்திகளைப் பார்த்துடலாம். என்ன சொல்றே? நான் ஆரம்பத்திலிருந்தே என் குழந்தைகள் கிட்டே இதைப் பற்றிச் சொல்லியிருக்கேன் அடிக்கடி...''

''நிச்சயமா பண்ணலாம் சங்கரா! கல்யாணத்தை முடிச்ச உடனே பசங்க வேணா படிப்பையும் முடிச்சுக்கட்டும். நானும் கூட என் குழந்தைகள் கிட்டே நம்ம திட்டம் பற்றி அவ்வப்போது சொல்லியிருக்கேன்'' தன் பங்குக்கு கல்யாணராமனும் ஆமோதித்தார்.

மகன் அருணும், மகள் மாலாவும் அடுத்தடுத்து வீடு திரும்பியதும் அவர்களைக் கல்யாணராமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார் சங்கரமூர்த்தி.

கல்யாணராமன் வீடு திரும்பும்போது இருட்டி விட்டது.

''என்ன இத்தனை நேரம்? பயந்தே போயிட்டேன். இதுகளும் இப்பத்தான் வந்ததுகள். வந்ததும் சுந்தர் பீச்சுக்குப் போறேங்கிறான். சுகன்யா கோயிலுக்குப் போறேங்கறாள். நீங்க வர்ரவரை அசையக் கூடாதுன்னு உட்கார வச்சிருக்கேன். இனி மேல் உங்கள் பாடு, அதுகள் பாடு'' என்று சலித்துக் கொண்டாள் கமலம்.

''சரிடாப்பா சுந்தர்! நீ கிளம்பு. மாலா! நீயும் கோயிலுக்குப் போய்ட்டு வாம்மா!'' என்றார் கல்யாணராமன்.

இரண்டுபேருமே அசையாமல், தாங்கள் புரட்டிக் கொண்டிருந்த புத்தகத்தையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதுவும் நல்லது தான்என்று எண்ணமிட்டவாறே தான் சங்கரமூர்த்தியை சந்தித்தது. நண்பர்கள் சம்பந்திகளாக வேண்டும் என்று அவர்களிருவரும் கனவு கண்டது, இன்று அது பற்றி சங்கரமூர்த்தி கூறியது எல்லாவற்றையுமே மூச்சு விடாமல் ஒப்பித்தார் அவர்.

''தெரிந்தவர்கள்னா நல்லதுதானே? ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்ள முடியும்'' கணவரின் கூற்றை ஆமோதித்தாள் கமலம்.

''எங்க பிளான் என்னன்னா அருணுக்கு சுகன்யா! சுந்தருக்கு மாலா!''



''அப்பா!'' மெல்ல அழைத்தாலும் சுந்தரின் குரலில் ஒரு அழுத்தம் தெரிந்தது.

''என்னடா சுந்தர்! என்ன சொல்ல வரே?''

''மன்னிச்சுடுங்கப்பா! மணல் வீடு கட்டி விளையாடறப்போ பேசின திருமணப் பேச்சு, இந்த எலக்ட்ரானிக் யுகத்திலே செல்லுபடியாகாது. உங்க திட்டத்துக்கு காலவரையறை நிர்ணயம் செய்யாவிட்டாலும் கூட, அது காலாவதியாகிட்ட திட்டம்ப்பா! நாங்க பிறக்கறதுக்கு முன்னமேயே, நீங்கள் எங்களைக் கைது பண்ணிட்டீங்கப்பா! ஆயுள் தண்டனையே பதினாலு ஆண்டுகள்தான். எனக்கு இருபது வயசாகிறது. எங்களுக்கு விடுதலை கொடுங்க. உங்க உடன்படிக்கையையும் ரத்து பண்ணுங்கப்பா!''

''சுந்தர்! என்னடா சொல்றே? உங்க சின்ன வயசிலிருந்தே நான் சொல்லி வந்ததுதானே இது?'' அவர் குரலில் நடுக்கம் பரவியிருந்தது.

''சுந்தர் சொல்றதிலே என்னப்பா தப்பு? உங்க பிரண்டோட மகனை நான் கல்யாணம் பண்ணிகிட்டா எனக்கு வேறே 'நோயாளிகள்' வேண்டாம். என் மாமனாருக்கு வந்திருக்கிற அல்சருக்கும், வரப் போற நாலு வகையான நோய்களுக்கும் வைத்தியம் பண்றதோடில்லாமல் பத்தியம் வேறு சமைச்சுப் போடணும். என்னாலே முடியாதுப்பா...'' படபடவென்று மொழிந்தாள் சுகன்யா.

''சுகன்யா! என்னம்மா, நீயா இப்படிப் பேசறே? உங்கப்பா கொடுத்த வாக்கை நினைச்சுப் பார்த்தியாம்மா?''

''வாக்கப்பற்றி நினைச்சுக்கிட்டே இருந்தா நாம் செல்வாக்கை மறந்துட வேண்டியதுதான்.'' சுந்தர் கடுகடுத்தான்.

''சுகன்யா! சுந்தரமூர்த்தி கேட்டால் உயிரையே விட்டுடுவான்ம்மா! நீயாவது நான் சொல்படி கேளும்மா!'' அவர் குரலின் கெஞ்சல் மகளை அசைவிக்கவில்லை.

''அப்பா! என்னப்பா இது? யாரோ ஒருத்தர் உயிரை விட்டுடுவான்னு, நான் அந்தச் சிறையிலே போய் விலங்கைப் பூட்டிக்கணுமா? அது என்னாலே முடியாதுப்பா!... என்னை மன்னிச்சுடுங்க....'' பொறுமையிழந்து, தீர்மானமாகக் கூறினாள் சுகன்யா.

கல்யாணராமனின் உடம்பெல்லாம் நடுங்கியது. வாக்கு தவறிவிட்ட குற்றத்திற்கு ஆளாகிவிடுவோமோ என்ற அச்சம் அவரைச் சூழ்ந்தது. இரத்தமெல்லாம் தலைக்கு ஏறுவது போன்ற பிரமை. நெஞ்சில் சில ஊசிக் குத்தல்கள். வயிற்றில் பீதியின் புரளல். என்ன இது சங்கரமூர்த்தி கேட்டது போன்ற வியாதிகள் எல்லாம் தன்னிடம் படையெடுத்து விட்டனவா? ஆடிப் போய் விட்டார் அவர்.

ஒரு வாரம் அவர் உள்ளுக்குள் தீப்பந்தம் திகிலாக எரிந்தது.

''என்னடா அருண் இது? என்ன சொல்றே?'' சங்கரமூர்த்தியும் கல்யாணராமனைப் போல் அதிர வேண்டி வந்தது.

''இதோ பாருங்கப்பா! எங்க வாழ்க்கையை வைத்து விளையாடாதீங்க. உங்க சிறுபிள்ளைத்தனமான திட்டங்களை நாங்கள் ஏற்பதாக இல்லை. எங்களுக்காக பெண், மாப்பிள்ளை தேடும் சிரமம் உங்களுக்கு வேண்டாம். நாங்களே தேர்ந்தெடுத்துக்கறோம்.

ஒரு மெடிக்கோவுக்கு, மெடிக்கோவே மனைவியா வந்தால், அவள் கணவனுக்காகக் காத்திருக்க முடியுமா? மகிழ்ச்சியைத் தான் தர முடியுமா?'' என்றான் அருண்.

''ஆமாம்ப்பா! நான் பொறியியல் படிச்சுட்டு, என் மாமியாரோட டயாபெட்டீஸுக்குப் பணிவிடை செய்ய முடியுமா? எனக்குப் பிடிச்ச வாழ்க்கையை உங்களால் தேர்ந்தெடுக்க முடியாதுப்பா...'' குரல் தழதழக்கக் கூறினாள் மாலா.

''ஐயோ குழந்தைகளே! கல்யாணராமன் வந்தா நான் என்ன பதில் சொல்லுவேன்? அவனை முதலில் தூண்டி விட்டது நான் தானே?'' நொந்து கொண்டார் சங்கர மூர்த்தி.

ஒரு கனைப்புச் சத்தம் கேட்டது.

கல்யாணராமன் உள்ளே வந்தார்.

''உட்கார் கல்யாணம்!'' குரல் நடுங்க உபசரித்தார் சங்கர மூர்த்தி.

கல்யாணராமன் உட்காரவும் சுந்தரும், சுகன்யாவும் சட்டென எழுந்து உள்ளே போய் விட்டனர்.

''அனுசுயா!'' என்று சங்கர மூர்த்தி விளிக்கவும் தடுத்தார் கல்யாணராமன்.

''வேண்டாம் சங்கரா. உங்கள் சாப்பாடு எனக்கு ஒத்துக் கொள்ளவில்லை.! சம்பந்தமும் அப்படி தான்!''

''கல்யாணம்!''

''ஏன் சங்கரா இப்படிக் கலங்குறே? என்ன இருக்கு இதிலே? குழந்தைகளோட மகிழ்ச்சிதான் நம்ப நட்பைவிடப் பெரிசு! ரொம்பவும் முன்னாடியே திட்டம் போட்டாலும் அதுக்கு ஆயுசு கம்மி தான்!''

''உண்மைதாண்டா கல்யாணம்! என் பெண் இனிமையாக மறுத்தாள். என் பையன் காரசாரமாக எதிர்த்தான். என் மனைவி கசப்போடு எதிர்த்தாள். நான் என்ன செய்ய முடியும்? நான் குழந்தைகளுக்கு எந்தச் சுவைகளை ஊட்டினேனோ, அதே சுவைகளை அவர்கள் நேர் மாறான முறையில் திருப்பித் தருகிறார்கள்!''


''வருத்தப்படாதே சங்கரா! நாம் வருங்கால உறவுக்குத் திட்டமிட்டோம். இவர்கள் புது யுகம். பிரிவுக்குத் திட்டமிட்டு எதிர்க்கிறார்கள்... என் வீட்டிலும் இதே கதைதான்! இந்த அதிர்ச்சியை நாம் விழுங்கி விடுவோம். வரட்டுமா?'' என்று கல்யாணராமன் எழுந்தார்.

''கல்யாணம்! நாம் எத்தனை ஆண்டுகள் கழித்து மீண்டும் சந்தித்தோம்! நம் நட்பு நீறு பூத்த நெருப்பு மாதிரி உயிர்த்து வந்திருக்கு. நட்பு உறவாகட்டும் என்று நினைத்தோம். ஆனால் உறவு முறை ஒன்றினால் தான் நட்பு நிலைக்குமா என்ன? நட்புக்கு நட்புதான் பதில். நட்புக்கு நட்புதான் துணை. நாம் அதைக் கடைசி வரையில் காப்போம்.!'' சங்கரமூர்த்தி கல்யாணராமனின் கைகளைப் பற்றிக் கொண்டு தழதழத்தார்.

''சங்கரா! நீ சொன்னதே சரி. நம் நட்பை நம் குழந்தைகளின் மனநிலை குலைத்து விடாது. நாம் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நாலு மணிக்கு 'ஆவின் மில்க்' பாருக்கு வருவோம். ஆளுக்கு ஒரு வாசனைப் பாலை வாங்கிப் பருகியவாறே நட்பைக் கொண்டாடுவோம். மனம் விட்டு அளவளாவுவோம். நீ உடம்பு சரியில்லாதவனாச்சே, நானே உன்னை வீட்டில் விட்டு விட்டு, பெசன்ட் நகர் போகிறேன். ஓ.கே.?'' என்று கூறினார் கல்யாணராமன்.

இரண்டு முதிய உள்ளங்கள், தங்கள் நட்பை இளமையாக்கி மகிழ்ந்தன. தங்கள் அன்பைப் புதுப்பித்துக் கொண்டு பிரிந்தன.






# சத்துணவு மையத்தில் தாய்மனத்து முதல்வர்

உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவை யொட்டி மதுரைக்கு வருகை புரிந்திருந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், 15.4.86 அன்று ஷெனாய் நகரில் உள்ள மாநகராட்சிப் பள்ளிக்குத் திடீரென்று சென்று, அங்குள்ள சத்துணவு மையத்தைப் பார்வையிட்டார். அங்குள்ள குறை பாடுகளை அறிந்து அவற்றைக் களைவதற்கு ஆவன செய்யுமாறும், குறைபாடுகளுக்குக் காரணமான வர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராசுலு, இ.ஆ.ப. அவர்களிடம் தெரிவித்தார் மாண்புமிகு முதல்வர். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி உடன் இருந்தார்.

அமுதம் சிறப்பங்காடி, பாண்டியன் சூப்பர் மார்க்கெட் ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வை யிட்டார் மாண்புமிகு முதல்வர்.





# எழுகடல் தெருவில் பழைய மண்டபம்

உலகத் தமிழ்ச் சங்கத் தொடக்க விழாவை யொட்டி சங்ககாலப் புலவர்களின் நினைவுத் தூண் நிறுவப்படுவதற்காக, மதுரையில் எழுகடல் தெருவில் உள்ள வசந்தங்குழி என்னுமிடத்தில் தோண்டப்பட்டது. அப்போது பூமிக்கடியில் ஒரு மண்டபம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் நினைவுத்தூண் தமுக்கம் மைதானத்தின் தலைவாசலில் நிறுவுவதாக முடிவு செய்யப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட மண்டபம் ஒரு குகைப் பாதையாகச் செல்வதாகவும்-இது மீனாட்சியம்மன் கோவிலுக்குச் செல்லும் பாதையாக இருக்கலாம் என்றும் தெப்பக்குளத்துக்குச் செல்லும் வழியாக இருக்கலாம் என்றும் பலவிதமான கருத்துகள் சொல்லப்படுகின்றன.

இந்த மண்டபத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், நேரில் சென்று பார்வையிட்டார்.

''இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஆகவே மேலும் தோண்டிப் பாருங்கள். தொல் பொருள் ஆய்வாளர் துணையுடன் தொடர்ந்து தோண்டி ஆராய்ச்சி செய்யுங்கள் - இதற்கு வேண்டிய உதவியை அரசு செய்யும்'' என்று மாவட்ட ஆட்சியாளரிடம் தெரிவித்தார் மாண்புமிகு முதல்வர்.

# புதுமையிற் சில...

**கவிஞர் மன்னர் மன்னன்**



கூர்வாள் ஏந்தும் கொற்றவனின் கொலு மண்டபத்தில் நிற்கும் கவி உதாரன்,

அவள் அழகு வெளிச்சம் அடித்ததென்மேல்
கொள்ளை வனப்பிலே
எனைக் காமனும் தள்ளிடக் காலிடறிற்று
கவிழ்ந்தவண்ணம் வீழ்ந்தேன்

எனத் தன்னிலை விளக்கம் தருகின்றான்
இது கேட்ட அரசன்,
'குவிந்த உன் உடற்சதையைப் பல
கூறிட்டு நரிதின்னக் கொடுத்திடுவேன்!' என்று
அச்சுறுத்திவிட்டுச்
'சிலையிடை இவனை வைத்தே-சிரச்
சேதம் புரிக' என்று கொலைஞர்க்கு ஆணை
யிடுகிறான்
சிலிர்த்தெழும் அரசிளங்குமரி
அமுதவல்லி செப்புகிறாள்.
'இலை உனக்கதிகாரம் அந்த
எழிலுடையான் பிழை இழைக்கவில்லை!'

தமிழ்க் கவிஞன் உதாரனையும் தன் மகள் அமுதவல்லியையும் கொன்றிட ஆணை யிடுகிறான் ஊராள்வோன். கொலைக்களத் தில், நிறையுழைப்பாளரின் குருதியைக்குடித்த அரசன், குடிமக்கட்குப் புல்லளவு மதிப்பும் தராத இழிநிலையை எடுத்துரைக்கிறான் உதாரன். முறைகேட்டு மக்கள் கொதித் தெழுந்து, 'புவியாட்சி உனக்கில்லை' எனப் புரட்சி செய்கின்றதைக் கேட்டு அரசன் ஓடி யொளிகிறான். முடியாட்சி கவிழ்ந்து குடி யாட்சி தழைக்கிறது. செல்வமெலாம்-உரிமை எலாம் நாட்டாருக்கே எனச் சட்டம் இயற் றப்படுகிறது.

'பில்கணீயம்' என்ற வடமொழி நூலைத் தழுவியது—இந்தக் குறிப்புடன் பாவேந்தர் படைத்த இனிய காப்பியமான 'புரட்சிக்கவி' யில் காணும் இறுதிக் காட்சிகளைப் படித்து விட்டு, மூல நூலான பில்கணீயத்தைத் தேடிப் பிடித்துப் படிக்கிறோம்.

1875ல் வ.கணபதிப்பிள்ளை முதன் முத லில் மொழி பெயர்த்து அச்சிட்டு வெளியிட் டது என்ற அடிக்குறிப்புடன் கிடைக்கும் இந்த நூலில் இன்னும் சில விவரங்கள் உள் ளன.

'யாழ்ப்பாணத்துப் புலோலி மகாவித்து வான் வ. கணபதிப் பிள்ளை மொழிபெயர்த் தது. திருமயிலை சே. வை. ஜம்புலிங்கம் பிள்ளை, பதிப்பு. 1928 சாது அச்சுக்கூடம் சென்னை.'

இந்நூலின் சில பகுதிகள் நம் கருத்தில் பதிகின்றன.

இளவரசி யாமினி பூரண திலகைக்கும் பில்கணனுக்கும் இடையிலே இடப்பட்ட திரைச்சீலை நீங்கியபின், கவிஞன் பாடுகிறான்:

**கொச்சகம்**

அன்னப்பெடையே அழகார் பசுங்குயிலே
கன்னியரசே கருதுமணி மாமயிலே
மின்னற்கொடியே மிளிர்காம பூஷணமே
உன்னைப் பிரிந்தேனேல் உய்வனோ கண் மணியே
மானே மடக்கொடியே மாரவேள் சாயகமே
தேனே சுரரமுதே தித்திக்குஞ் செங்கரும்பே
ஊனோ டுயிருருகி யுள்ளமெல்லாஞ் சோரு கின்றேன்.
யானோர் செயலறியேன்யாது புரிவேன்மதியே

தொடர்கிறது வருணனை! எல்லாமே உடல் உறவுக்களியாட்டம். அது இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்பது தான் பில்கண னின் முடிவு. அந்த உடல் உறவின்பம் இல்லை யேல் உயிர்வாழ முடியாது எனச்சாவை வர வேற்கிறான். கொலைத்தண்டனை பெற் றுக் கூர்வாள் முனையில் தலை நீட்டுகையில்,

''இப்பொழுதும் கூட அந்த எழிலரசி யைக் கூடிப் பெறுகின்ற இன்பமின்றி நான் உயிர்வாழ்தல் என்பது இயலாத ஒன்று. அடங் காத இந்த வேட்கையை மாற்றிடச் சாவே சரியான மருந்து. உடனே என் தலையைக் கொய்து விடுங்கள்' எனப்புலம்புகிறான் கவி ஞன்.

1914ல் வடமொழியிலிருந்து பில்கணீ யத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பி.சேஷாத்திரி தன் முன்னுரையில்,

(தொடர்ச்சி 28-ஆம் பக்கம்)



# நீங்களே சொல்லுங்கள்!

## பாவேந்தர் பாரதிதாசன்

சித்திரச் சோலைகளே! உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே.

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே! - உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்தஅக் காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே?

மாமிகு பாதைகளே! உமை இப்பெரு
வையமெ லாம் வகுத்தார் - அவர்
ஆமை எனப் புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்!

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே! - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் - எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! - உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே !

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? - பசி
தீரும் என்றால் உயிர்போகும் எனச் சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? - இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும்உ'த் தேசமில்லை - சொந்த
வலிவுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை!

(25- ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இது, 11ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் வாழ்ந்த பில்கணன் என்ற கவிஞனின் சொந்த வாழ்க்கையே என அறிஞர்கள் கருதுகிறார்கள்'' என்கிறார்.

நமக்கு வியப்பு மேலிடுகிறது.

தமக்குக் கிடைத்த சின்னஞ்சிறிய காதல் (?) கதையைப் பாவேந்தரின் நெஞ்சம் எப்படிப் பார்த்திருக்கிறது?

அக உணர்ச்சிகளின் அடக்கமான பதிப்பாக மிளிரும் சங்கத் தமிழ் இலக்கியம் எங்கே!

உடல் உணர்ச்சி வெளிப்பாடான வடமொழியின் பில்கணீயம் எங்கே!

பாவேந்தரின் உள்ளம் 'இன்னலிலே தமிழ்நாட்டினர் இனிதாய்த் துயின்றிருக்கும் நிலையைக் காண்கிறது. இன்பக் கிளர்ச்சியை இன்னமும் ஊட்டுவதோ!

முடியாது-கூடாது!

தமிழ் இலக்கியம், இலக்கணம் கற்பிக்க வந்த ஏழைக் கவிஞனின் தலை மண்ணிலே உருளப்போகிறது. அவனின் கூரிய விழிகள், குவிந்திருக்கும் மக்கள் கூட்டத்தினரைப் பார்க்கின்றன.

உடைமைகள் யாருக்கு!

கோல் பிடித்து ஆள வந்திருக்கும் மன்னன் கொடுமை புரியத் தொடங்கினால், அவனைத் திருத்த வேண்டியவர்கள் குடிமக்கள் தாமே!

கண்ணுளே நெஞ்சை வைத்துப் பார்க்கிறான் தமிழ்க்கவிஞன். கருத்து மழைபொழிகிறான்.

''தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்;
தமிழ்க்கவியென்றெனை அவளும் காதலித்தா தான்!
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ், என்னாவி
அழிவதற்குக் காரணமாயிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ! அய்யகோ!என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ
உமையொன்று வேண்டுகின்றேன், மாசில்லாத
உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!''

தன்னலத்தை முற்றிலும் விட்டொழித்துத் தமிழின் மேன்மைக்குத் தன்னுயிரையும் ஈந்திட முன் வருகிறான் உதாரன். தன் அன்புக் காதலியோடு சாவைத் தழுவிடவும் அவன் தயங்கவில்லை.

தமிழ்ச் சமுதாயம் எந்த உணர்ச்சியை இந்த நாளில் பெறவேண்டும் என எண்ணினாரோ அந்தச்சீரிய குறிக்கோளைத் தன் காப்பியத்தில் வலியுறுத்துகிறார் பாவேந்தர்.

தமிழ் உணர்ச்சி பெருகவேண்டும் என்பது ஏன்?

இப்படிச் சிந்திக்கிறார் பாவேந்தர்

தமிழால் ஒன்று படவேண்டும். தமிழினம் மேன்மையுற இது ஒன்றே வழி எனக் கருதுகின்றார்.



'கவிதை கவிதைக்காகவே!' என்பாரும் உண்டு என்பதால், கவிதை மக்களுக்காகவே என்ற கருத்தின் முதல்வனாகத் தம்மைமெய்ப்பிக்கும் வகையில் தம் படைப்புக்களை உருவாக்குகிறார்.

பில்கணன் தன் உடல் உறவு இன்பத்துக்காக உயிர்துறக்கவும் முன் வருகிறான் எனில் அது வடித்தெடுத்த தன்னலம். அவர் உயிர் வாழ்வதாலோ இழப்பதாலோ சமுதாயத்துக்கு எள்ளத்தனை பயனும் இல்லை.

ஆனால், ஆணவத்தின் சின்னமாய் விளங்கும் அரசனின் கொடுங்கோலை முறித்திட மக்கட் சமுதாயத்தை அணியமாக்கும் உதாரன், தமிழ்க்காப்பியத்துக்கே புதுமையான எடுத்துக்காட்டாக மிளிர்கிறான்.



புதுமையின் விளைச்சல் எல்லாம் புவி மக்களின் மேன்மைக்கே ஆக வேண்டும்.

பழைய பாட்டையில் சென்று சரிந்து மாளப் போகும் தமிழ்ச் சமுதாயம் பொட்டுப்பூச்சியாய்-புன்மைத் தேரையாய்-தொங்கும் நரம்பின் தூளாய் இருந்தது போதும்

தலையைத் தூக்கு!
ஏறு நீ மேலே மேலே!

எக்காளமிடுகிறார் பாவேந்தர், தன்னலத்தை மறந்ததாலே, தம் நாட்டு மக்கள் நலனை நினைத்ததாலே!

வளரும் தமிழ்ச் சமுதாயம் வளம் பெறுதற்கும் வலிமை உறுதற்கும் எங்கும் புதுமை பல செய்கிறார்—அதனால் தானே அவர் புரட்சிக்கவி!

# படமும் செய்தியும்



சென்னை மைலேடீஸ் கார்டனில் நடைபெற்ற மலர்க் கண்காட்சியில் சிறந்த பூச்செடிகளுக்குரிய பரிசுகளை மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் வழங்கினார். (4-4-86)


விபத்து மற்றும் விபத்துத் தடுப்பு பற்றிய ஆய்வுக் கூட்டம் 21.4.86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. குடி போதையில் நிதானமிழந்து வாகனங்களை ஓட்டுபவர்களைக் கண்டு பிடிப்பதற்கான புதிய கருவியின் செயல் முறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்.






புதுடெல்லியில் 7.4.86 அன்று நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மத்திய அமைச்சர் திரு பூட்டாசிங் அவர்களைச் சந்தித்தார். மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் உடன் உள்ளார்.

அதே நிகழ்ச்சியில், மாண்புமிகு ஆந்திர மாநில முதல்வர் திரு என்.டி. இராமாராவ் அவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் சந்தித்தார்.



# வேளாண்மை ஆராய்ச்சி ஒரு கண்ணோட்டம்

**வி. ராஜகோபாலன்,**
**துணை வேந்தர்,**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் இன்றளவும் பெரும் பங்கு வகிப்பது வேளாண்மைத் தொழிலாகும். வேளாண்மையை மேம்படச் செய்வதன் மூலமே தமிழகத்தின் தலையாய பிரச் சனைகளான வறுமை, வேலை யில்லாத் திண்டாட்டம், சத்து ணவுப் பற்றாக்குறை போன்ற அடிப்படைக் குறைபாடுகளை நீக்கிட இயலும். மக்களின் சமூக, பொருளாதாரச் சீர்கேடுகள் மறைந்து வளம் பெறவும் வேளாண்மை வளர்ச்சியே அடிப் படையாகும். வேளாண்மை வளர்ச்சிக்குப் பின்வருவன உறு துணையாக உள்ளவையாகும்:

* **"வேளாண்மையில் தீவிர ஆராய்ச்சிகள் மேற்கொள்வது, அவற்றின் முடிவுகளை விரைவாக் உழவர்களிடம் கொண்டு செல் வது.**

* **வேளாண் உற்பத்திக்கான இடுபொருள், காலத்தில் கிடைக் கச்செய்வது.**

* பருவத்தில் பயிர் செய்திட உழவுக் கருவிகள் குறைந்த விலை யில், காலத்தே கிடைக்க வகை செய்வது.

* வேளாண் விற்பனைக்கான வசதி மார்க்கட் மற்றும் சாலை வாகன வசதிகள் பொருள்களைச் சேமிக்கக் கிட்டங்கி வசதிகள் செய்வது.


* பால்வளம், கோழி மற்றும் பறவையினங்களின் பெருக்கத் திற்கு ஆய்வு மேற்கொள்வது.

* மீன்வளம், வனவளம் சீராக மேம்பட்டு வளர்வதற்கு வேண் டிய அறிவியல் முறைகளை ஆய் வது.

* மனையியல் ஆய்ந்து மனை மாட்சிக்கு வகை செய்வது.

இவற்றோடு விவசாயக் கடன் வசதி, வேளாண் விரிவாக்கக் கல்வி, கிராம, மாவட்ட மாநில மற்றும் தேசிய அளவிலான வேளாண் வளர்ச்சித் திட்டம் முதலியனவும் இணையும்போது வேளாண்மை விரைந்து வளர வாய்ப்புப் பெருகுகின்றது. மேற் கூறியவற்றில் தலையானதாக விளங்குவது ஆராய்ச்சி-வேளாண் பல்கலைக் கழகத்தில் நடை பெற்று வரும் ஆராய்ச்சிகளைப் பின்வரும் முறையில் பாகுபாடு செய்யலாம்.

இவ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கம் புதிய பயிர் இரகங்களை உருவாக்குதல், தமிழகத்தின் தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கேற் றவையாகவும், நோய் மற்றும் பூச்சியெதிர்ப்பு கொண்டவையா கவும் தானிய மற்றும் தட்டு மக சூல் கொடுக்கக் கூடியவையாக வும், உணவு சத்து ருசி போன்ற வற்றைக் கருதியும் வெப்பம் குளிர் நீர் வறட்சி தாங்கும் தன்மை ஆகியவற்றையும் மைய மாக வைத்தும் புதிய இரகங்கள் உருவாக்கப்படுகின்றன.



நெல்லில் வெள்ளைப்பொன்னி, ஏ.எஸ்.டி.16, சோளத்தில் கோ. 26, கம்பில் கோ.7 பனிவரகில் கோ.3, நிலக்கடலையில் வி.ஆர். ஐ 1, கொண்டைக்கடலையில் கோ.3, சூரியகாந்தியில் கோ.2, தீவன காராமணியில் கோ.5 தீவனச் சோளத்தில் கோ.27, மஞ் சளில் பி.எஸ். 1, பப்பாளியில் கோ. 6, புடலையில் கோ. 2, துவரையில் பி.எஸ்.1, கேந்தியில் எம்.டி.யு.1 ஆகிய புதிய இரகங் கள் கண்டறியப்பட்டுத் தமிழக உழவர் பெருமக்களுக்கு வழங்கப் பெற்றுள்ளன.

பயிர்களை நன்கு பராமரிக்க வும், உற்பத்திச் செலவைக்குறைக் கவும் ஏற்ற வழிகளை இவ்வா ராய்ச்சிகள் தெரியப்படுத்துகின் றன. உயிரியல் உரமிடுதல், உர அளவை நிர்ணயம் செய்தல், விதைக்கும் பருவம், உரமிடும் பருவம், ஊடுபயிர் செய்தல், களைக்கொல்லிகள், நிலத் திருத்தம் போன்ற ஆய்வுகள் இதில் அடங்கும்.

**சில முக்கிய முடிவுகள் பின் வருமாறு:**

* நெல்லில் ஒரு எக்டருக்கு இட வேண்டிய 100கிலோநைட்ரஜனில் பாதியை உயிரியல் தழுவிய உரங்களான அசோலா, வேப்பம் பிண்ணாக்கு முதலியன மூலமாக வும், மீதியை செயற்கை உர மாகவும் அளித்தல் தானிய மற் றும் வைக்கோல் மகசூலை உயர்த் துகின்றது.

* எக்டருக்கு 90 கிலோ நைட் ரஜனை வேம்பு பூசிய யூரியா மூல மாகவும், அதோடு இரண்டுமுறை அசோலா இடுவதனாலும் ஏ.டி.டி 36ன் தானிய மகசூல் எக்டருக்கு 5.1 டன்னாகவும் ஐ.ஆர்.20ன் தானிய மகசூல் எக்டருக்கு 5.4 டன்னாகவும் உயர்ந்துள்ளது.

பதினைந்து கிலோ சோள விதையை பருவக் காற்று காலத் திற்கு இரண்டு வாரம் முன்பாக உரவிதை தெளிக்கும் கருவியின் மூலம் விதைப்பது சோள மக சூலை அதிகப்படுத்துகின்றது.


சோளத்தில் அவரையை ஊடு பயிர் செய்வதன் மூலம் சோளத்

தில் கதிர்ப் புழுவின் தாக்குதல் 2.30 சதவீதத்திற்குக் குறைகின்றது.

அசோஸ்பிரில்லத்தையும் மைக்கோரைசா பூஞ்சானத்தையும் சேர்த்து இடுவதன் மூலம் கேழ்வரகு மகசூல் 49% அதிகரிக்கின்றது.

உளுந்தின் களைகளைக் கட்டுப்படுத்துவதில் பாசலின், ஸ்டாம்ப் மற்றும் ரோன்ஸ்டார் ஆகியவை ஒரே அளவு திறன் கொண்டவையாக உள்ளன.

கொண்டைக் கடலையுடன், கொத்தமல்லி ஊடு பயிர் செய்வதன் மூலம் மொத்த எக்டர் மகசூல் அதிகரிப்பதோடு ஒரு எக்டரிலிருந்து பெறப்படும் வருமானமும் ரூ.3,200 ஆக உயர்கின்றது.




உளுந்து மற்றும் குசும்பாவை சேர்த்து 3:1என்ற விகிதத்திலும், செடி எண்ணிக்கை முறையே 100%மற்றும் 25%என்ற விகிதத்திலும் பயிரிடுதல் பொருளாதார ரீதியில் சிறந்ததாக உள்ளது.

நிலக்கடலையில் காய் பிடிக்கும் சமயமே பாசன நீர் பாய்ச்சுதலில் மிக முக்கிய பருவமாகும்.

பருத்தியில் ஃப்ருகளோராலின் களைக் கொல்லியை (எக்டருக்கு 0.75 ஏ.ஐ) விதைப்பதற்கு முன் இடுவதனால் களைகள் கட்டுப்படுவதோடு களையெடுக்கும் செலவில் எக்டருக்கு ரூ.400ஐக் குறைக்கின்றது.

நெல் தரிசு பருத்திக்கு டையூரான் களைக்கொல்லி (0.5கிலோ எக்டர்) விதைப்பதற்கு முன் இடுவது பருத்தி மகசூலை அதிகப்படுத்துகின்றது.

கரும்புக்குக் கிளையடிக்கும் பருவத்தில் குறுகிய கால இடைவெளியிலும், முதிர்க்கும் சமயத்தில் அதிக இடைவெளியிலும் நீர் பாய்ச்சுவது மகசூலை அதிகரிப்பதோடு பாசன நீர் அளவையும் குறைக்கின்றது.

கரும்புச் சாற்றை பதப்படுத்தி வைப்பதற்கு சாற்றைப் பாட்டியில் அடைப்பதற்கு முன் பொட்டாசியம் மெடபி சல்பைடை (350 பி.பி.எம்) கலப்பதன் மூலம் சாறு நல்லமுறையில் பாதுகாக்கப்படுகின்றது.

சோயாமொச்சையை அது பூத்ததிற்குப் பின் 50 நாட்களில் அறுவடை செய்வது நல்ல தரமான விதை மகசூலை அளிக்கிறது.

**பயிர்ப் பாதுகாப்பு:**

பயிருக்கு வரும் நோய்கள், மற்றும் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பற்றி ஆராய்ந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகள் பற்றி இவ்வாராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. பூச்சிகளைக் கொண்டே பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், இரசாயனப் பூச்சிக் கொல்லிகள் மற்றும்மருந்து உபயோகிப்பு முறை, அளவு அவற்றை பயிருக்கு அளிக்கும் சமயம், பூச்சிகளைப் பொறிகள் மூலம் பிடித்தல் போன்றவை இவற்றில் அடங்கும். அவைகளில் சில வருமாறு:

தார் பூசிய யூரியா இடுவதன் மூலம் நெல்லில் இலை சுருட்டுப் புழு மற்றும் தண்டுத் துளைப்பானில் தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகின்றது.

நெல்லில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் ஒரு சதவீதம் அதிகரித்தால் நெல் மகசூலில் 18.13 கிலோ குறைகின்றது. இலை சுருட்டுப் புழுவின் பொருளாதார சேத நிலை 5-6% பாதிக்கப்பட்ட இலையாக உள்ளது.

பதினெட்டு நாள் வயதுடைய கம்பு நாற்றுக்களை நடுவதன் மூலம் பசுங் கதிர் நோயின் அளவு 3.1 % குறைகின்றது.

துவரையில் 375 மி.லி. ஃபென்வலரேட் தெளிப்பதன் மூலம் காய்ப் புழுத் தாக்குதலின் அளவு 16.57% ஆகக் குறைக்கப்படுகின்றது.

உளுந்து விதையில் ட்ரைகோடர்மா ஹர்சியானம் என்ற பூஞ்சானத்தைக் கலப்பதன் மூலம் அதன் முளைக்கும் திறன் 100 சதவீதமாக உயர்த்தப்படுகின்றது.

தென்னையில் மரமொன்றுக்கு 100 கிராம் போரான், மற்றும் 0.3, 0.15 மற்றும் 0.6 கிலோ நைட்ரஜன், பாஸ்பைரன் மற்றும் பொட்டாஸ் இடுவதன் மூலம் பென்சில் முளை வில்ட் நோயால் தாக்கப்பட்ட மரம் மீண்டும் நன்கு காய்க்கத்தொடங்குகின்றது. இவ்வாறு உரம் அளிக்கப்பட்ட மரத்தின் மகசூல் மரமொன்றுக்கு 43 ஆகவும், உரமளிக்கப்படாத மரமொன்றுக்கு 14 ஆகவும் இருந்தது.

**வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வுகள்:**

வேளாண்மை வளர்ச்சிக்கான சமூகப் பொருளாதாரக் காரணிகளைக் கண்டுபிடித்தல், புதிய திட்டங்கள் அமல்படுத்துவதன் மூலம் அவற்றால் வேளாண்மையில் ஏற்படும் மாற்றங்கள்,ஊரக, வேலை வாய்ப்புப் பிரச்சனைகள், விவசாயத்திற்கும் பிற தொழில்கட்கும் இடையேயான தொடர்புகள், புதிய நுணுக்கங்களை விவசாயிகள் பயன்படுத்துதல்-பயன்படுத்தாமல் இருத்தல் போன்றவற்றை அறிந்து அவற்றிற்கான காரணங்களை அறிதல், விவசாயக்கடன், வேளாண் விற்பனை போன்றவற்றில் உள்ள பிரச்சனைகளைக் கண்டுபிடித்தல் போன்ற ஆய்வுகள் இதில் அடங்கும். அவைகளில் முக்கியமானவை:

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பற்றிய ஆய்வில், ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மக்களுக்கு ஏற்படும் பயன்கள் பற்றி பரப்புதல், ஒழுங்குமுறை விற்பனைக் கூட விதிகளைத் தளர்த்தாமல் அவற்றை அப்படியே அமல்படுத்துதல், கூட்டுறவு விற்பனைக் கூடங்களின் ஈடுபாட்டை அதிகப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பணிகளைச் சிறப்பாக ஆக்க இயலும்.

சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், தாரமங்கலம் மற்றும் வேலப்பட்டி சந்தைகளில் அவற்றின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மூலமாகவும் சந்தை நுழைவுக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமும் இச்சந்தைகளின் பணி மேம்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற நுகர்வோர்கள் அக்மார்க் பற்றி

அறிந்திருப்பினும் அக்மார்க் செய்யப்பட்ட பொருட்களை நாடிச் செல்வது குறைவாக உள்ளது. அக்மார்க் மாதிரிகளைச் சரிவர சோதிக்காமலிருத்தல், சரியான தரத்தின் மீதுள்ள அதிக வரி, அக்மார்க் பொருட்களின் விலை அதிகமாக இருத்தல் போன்றவையே அப் பொருட்களை மக்கள் அதிகமாக நாடாமல் இருக்கச் செய்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்வேயில் பின்வருவன அறியப்பட்டன.

அ. தென்னார்க்காடு மாவட்டம் ஒரு பிற்பட்ட மாவட்டமாக உள்ளது.

ஆ. நெல் மற்றும் நிலக்கடலை தவிர பிற வேளாண் பயிர்களின் உற்பத்தியில் ஒரு ஸ்திரமற்ற தன்மை உள்ளது.

இ. இம்மாவட்டத்திலுள்ள கடல் பகுதிகளில் மீன் உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பும் மற்றும் அங்குள்ள தாது உப்புகள் கிடைக்கும் தன்மையினால் தொழில் வளம் பெருகும் வாய்ப்பும் உள்ளது.

சாண எரிவாயு நிறுவுதலில் கிராமசேவக்குகள் பெரும்பங்கு ஆற்றியுள்ளார்கள். காதி மற்றும் கிராமக் கைத்தொழில் வாரிய சாண எரிவாயு சாதனத்தை விட, பல்கலைக்கழகச் சாதனமே அதிகமாக உபயோகத்தில் உள்ளது. நான்கு கன மீட்டர் அளவுள்ள சாதனமே பெரும்பாலான மக்களால் விரும்பப்படுகின்றது. ஒரு வீட்டில் சராசரியாக சாண எரிவாயு உபயோகப்படுத்தப்படும் நேரம் நான்கு மணிகளாகும்.

இடுபொருட்களைச் சரியான அளவில் சரியான நேரத்தில் வாங்க முடியாத நிலை, பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள், பாசன வசதியில்லா திருத்தல் கூலியாட்கள் பற்றாக்குறை போன்றவையே நிலக்கடலை மகசூல் அதிகரிப்புக்குத்தடையாக உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது.

தோட்டப் பயிர்களான பழவகைகள், காய்கறிகள், மலர்கள், காபி, தேயிலை, ஏலக்காய் போன்ற பயிர்களில், பயிர் மேம்பாடு, நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு ஆகியன இதில் அடங்கும். சில சிறந்த ஆய்வுக் குறிப்புகளாவன.

வீரிய வெண்டை இரகம் உருவாக்கும் திட்டத்தின்கீழ் இரண்டு புதிய வீரிய ஒட்டு இரகங்கள் உருவாக்கப்பட்டு பரிசோதனையில் உள்ளன. 'மா'வில் எபிகாட்டில் ஒட்டு முறையில் 84-100% வெற்றி கிடைத்துள்ளது.

திராட்சையில் ஜிப்ரலிக் அமிலத்தை (50 பி.பி.எம்.)இரண்டு முறை தெளிப்பதன் மூலம் திராட்சை மகசூல் அதிகப்படுகின்றது.

பீச் விதைகளை ஐ.பி.எ.வில் (500 பி.பி.எம்) நடுவதன் மூலம் அதன் முளைக்கும் திறன் 95% ஆக உயர்கின்றது.

தக்காளியில் கொலமஸ் மொசக் என்ற பூஞ்சானம் இடுவதன் மூலம் தக்காளிக்கு வரும் வில்ட் நோய் கட்டுப்படுத்தப்படுகின்றது.

பனைக்கு டி.ஏ.பி. மற்றும் பொட்டாசியம் குளோரைடு 2% தெளிப்பதனால் பதனீரின் உற்பத்தி மரமொன்றுக்கு 206 லிட்டராக உயர்கிறது.

விதைப்பதற்கு முன் காகிதப் பூச்சாற்றில் தக்காளி விதையை ஆறு மணி நேரம் ஊற வைப்பதன் மூலமாகவும் அல்லது விதைத்த பின் காகிதப் பூச்சாற்றை மண்ணில் நனைப்பதன் மூலமாகவும் தக்காளிக்கு வரும் 'டேம்பிங் ஆஃப்' என்ற நோய் தடுக்கப்படுகின்றது.

**வேளாண் பொறியியல் ஆய்வு**

கீழ்க்கண்ட புதிய கருவிகள் இயந்திரங்கள் முதலியன இவ்வாய்வுகளின் மூலம் உருவாக்கம் பெறுகின்றன. அவையாவன:

ஹைட்ராலிக் டைனமோ மீட்டர், புஞ்சைக் களையெடுக்கும் கருவி, மாடுகளால் இழுத்துச் செல்லப்படும் இரும்புக் கலப்பை, விதை மற்றும் உரம் போடும் கருவி, நீர் இறைப்பதற்கேற்ற மலிவு விலை காற்றாலை, பெப்பைன் உலர்த்தும்சூரிய உலர்த்தி, வேளாண் கழிவுகளைப் பிரிக்கெட் செய்யும் கருவி ஆகிய கருவிகள் வேளாண் பொறியியல் பிரிவிலிருந்து உருவாக்கப் பெற்றுள்ளன.





பனை விதை நன்கு முளைக்க விதைகளை அறுவடைக்குப் பின் மூன்று வாரங்கள் சேமிப்பில் வைக்க வேண்டும்.

யூகலிப்டஸ் போன்ற வன மரங்களோடு தானியப் பயிர்களைப் பயிர் செய்வதனால் மரங்களின் வளர்ச்சி குறைகின்றது.

காபிக்கு நுவக்ரான் பேடிஸ் செய்தல் காபி பயிருக்கு மூன்று மாதங்களுக்கு இலை சுரண்டும் பூச்சியிடமிருந்து பாதுகாப்பு அளிக்கிறது.

ஆடு மாடுகள், எருமைகள், கோழி, வாத்து, ஜப்பானியக் காடைகள் ஆகியவற்றில் புதிய இனங்கள் உருவாக்குதல், அவற்றிற்கு வரும் பிணிகளை நீக்கும் முறைகள் கண்டறிதல், அவற்றை வளர்ப்பதற்கான கட்டுத்தறிகள் நிர்மாணம் செய்தல், அவற்றிற்கான தீவனங்கள் கண்டுபிடித்தல் போன்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.



வேளாண்மையில் கால்நடைகள் இன்றியமையாத பங்கு பெறுகின்றன. வறட்சியான பகுதிகளில் கால்நடை வளர்ப்பிலேயே வேளாண் பெருமக்கள் வருவாய் பெருகின்றனர். பல்கலைக் கழகம் கால்நடை வளர்ப்பில் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றது. அண்மைக் காலத்தில் சில ஆராய்ச்சி முடிவுகள் வெளியாகி உள்ளன.

ரைனோஸ்போர்டியோசிஸ் என்ற பூஞ்சன காளான்களால் கால்நடைகளின் மூக்கில், கட்டி உண்டாகி கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. என்று அறியப்பட்டது.

கிளிரிசிடியா மேக்குலேட்டா என்ற தாவரத்தின் இலைகளைத் தனி உணவாக வெள்ளாடுகளுக்குப் பயன்படுத்தலாமென அறியப்பட்டுள்ளது.

சவுண்டலை ஆடுகளுக்கு தரமான உணவாகப் பயன்படுத்தலாம் என்று ஆய்வின் முடிவுகளால் அறியப்பட்டுள்ளது.

ராணிக்செட் என்ற வெள்ளைக் கழிச்சல் கோழி நோய்க்கான தடுப்பு மருந்தினைப் பொரிக்கப்பட்ட கேழ்வரகுடன் கலந்து கோழிக்குஞ்சுகளுக்கு அளிக்கலாம். தொழில் நுட்ப அறிவு பெறாத விவசாயிகளும் இந்த தடுப்பு மருந்தினை எளிதாகப் பயன்படுத்த முடியும்.

முட்டையிடும் வாத்துக்களைக் கூண்டுகளில் வளர்ப்பதைக் காட்டிலும் ஆழ்குள முறையில்வளர்ப்பதே சிறந்தது என ஆராய்ச்சியின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

கலப்பின முயல்கள் நாட்டு முயல்களைவிட வேகமாக வளரும் திறன் கொண்டவை.

குரோமேசோம் குறைபாடுகள் உள்ள பொலி காளைகள் தரமுள்ள விந்துவை உற்பத்தி செய்யவில்லை என அறியப்பட்டது. அவற்றை உபயோகிப்பது தவிர்க்கப்பட்டது. இரண்டு கிடாரிகளிடம் குரோமோசோம் குறைபாடு கண்டறியப்பட்டு அவைகளை மந்தையிலிருந்து நீங்க அறிவுரை வழங்கப்பட்டது.

### பாசன நீர் நுட்ப ஆய்வுகள்

பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் முறைகள், புதிய முறையில் நீர் பாய்ச்சுதல் போன்ற ஆய்வுகள் இதில் அசங்கும். சொட்டு நீர்ப்பாசனம், தெளிநீர்ப்பாசன முறைகளில் ஆய்வுகள் நடந்து வருகின்றன. முக்கியமாக தமிழகத்தில் நீர் வளத்தைப் பாதுகாத்து, சிறந்த முறையில் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதுதான் முக்கிய நோக்கமாகும்.

### மீன்வள ஆய்வுகள்

தமிழகத்தின் பலவகையான பகுதிகளுக்குகந்த மீனினங்கள் தேர்வு செய்தல் மீன் வளர்ப்பு முறைகளைக் கண்டறிதல், அவற்றின் உணவுப் பழக்கங்களைக் கண்டுபிடித்து உணவு திட்டம் தயாரித்தல், புதிய மீன்பிடி வலைகள் உருவாக்குதல்போன்ற ஆய்வுகள் இத்துறையில் செய்யப்படுகின்றன.

மீன்வளக் கல்லூரியிலிருந்து கிடைத்த சில ஆய்வின் முடிவுகளும் கீழே தரப்பட்டுள்ளன:

* மக்களுக்கு ஆர்டீமியா நபிலியை நாளொன்றுக்கு மூன்று கிராம் என்ற அளவில் தருவதானால் அவற்றின் எடை 50 நாட்களில் 33 கிராமாக உயர்கின்றது. கார்ப் மீன்களுக்கும் ஆர்டீமியாவை, நாளொன்றுக்கு 29 கிராம் எடையுள்ள மீனுக்கு மூன்று கிராம் அளவில் உணவாகத் தருவதானால் அவற்றின் எடை 15 நாட்களில் 25 கிராமாகக் கூடுகின்றது.

* புல்லவாலி உப்பளப் பகுதி **குரோசோண்ட்ரியா** ஆய்ஸ்டடர் வளர்ப்புக்கு ஏற்றது என்று அறியப்பட்டுள்ளது.

* உப்பளப் பகுதி மீன் வளர்ப்புக்கு **சிகானஸ்** கனாலிக்குலேட்டஸ் மீன் வகைகள் பொருத்தமானவையாக உள்ளன.

* வெம்ளா உணவு மீன்களுக்கு நல்ல உப உணவாக விளங்குகின்றது.

வேளாண் பல்கலைக் கழகம் தொலைநோக்கில் தன் திட்டங்கள் வகுத்துக் கொண்டு பணியாற்றி வருகின்றன.

1986-87ஆம் ஆண்டில் எடுத்துக் கொண்டுள்ள புதிய திட்டங்கள்:

## தட்டம்மைக்குத் தடுப்பு மருந்து

தட்டம்மைக்குத் "தடுப்பு ஊசி மருந்து" இன்னும் ஓராண்டுக்குள் கிடைக்கும் என்று அமெரிக்க நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"மெர்க்,ஷார்ப் அண்ட் டோமே" என்னும் அமெரிக்க மருந்துக் கம்பெனி இத்தடுப்பு மருந்தைத் தயாரித்துள்ளது. இது அபாயமற்றது, பாதுகாப்பானது என்று அந்த அதிகாரிகள் கூறினர்.

நல்ல ஆரோக்கியமான குழந்தைகளுக்கு இந்தத் தடுப்பு மருந்தை அளித்தால், அவர்களுக்குத் தட்டம்மை ஏற்படாமல் தடுத்துவிட முடியும்.

தற்பொழுது நடைபெற்று வரும் ஆராய்ச்சித் திட்டங்களும் மேலே குறிப்பிடப் பட்டுள்ள புதிய திட்டங்களும் பல்கலைக் கழக விஞ்ஞானிகளால் சிறப்புற நடத்தப் பெற்று அவற்றின் முழு பயனும் விவசாயிகளைச் சென்றடைவதுவேளாண்மை சம்பந்தப்பட்ட பல வேறு துறைகளின்- வேளாண்மைத் துறை, எண்ணெய் வித்துத்துறை, தோட்டக் கலைத்துறை, கூட்டுறவுத்துறை, வணிக வங்கிகள் போன்ற -ஒத்துழைப்பையும் சீரிய பணியையும் பொருத்ததாகும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பற்பல சாதனைகள் படைத்து வேளாண் பெருமக்களும் பொது மக்களும் ஏற்றம் கண்டிடமேலும் பல திட்டங்களை வரும் ஆண்டுகளில் நிறைவேற்றவும் சிறப்பாகப் பணிபுரியவும் பொதுமக்கள் மற்றும் பிற துறை அலுவலர்களின் ஒத்துழைப்பை நாடுகின்றது.

அண்ணா மாவட்டத்தில்

# ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்டம்

குழந்தைகள் முறையாக வளர தாயன்பு, கவனிப்பு, உடல் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து உணவுகள் மற்றும் குழந்தைகள் மன ஆர்வ வளர்ச்சிகளைத் தூண்டும் உணர்வுகள் (Stimulation of Mind) ஆகியவை தேவைப்படுகின்றன. ஒவ்வொரு தாயும் இவைகளையே தன் குழந்தைக்கு வழங்க விரும்புகிறாள். ஆனால் எல்லாத் தாய்மார்களாலும் குழந்தைகளுக்கு இவைகளை எப்பொழுதும் வழங்க இயலுவதில்லை. வறுமை, கூட்டுக் குடும்பச் சூழ்நிலை, சுகாதாரமின்மை ஆகிய காரணங்களால் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை உரியமுறையில் வளர்க்க இயலாமல் போய்விடுகிறது. இப்படி வசதியற்ற நிலையில் உள்ள குழந்தைகளுக்கு உரிய விதத்தில் உதவி அளிப்பதே அரசின் நோக்கமாகும். ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதமும், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகளின் இறப்பு விகிதமும், ஒரு நாட்டின் பொருளாதார நிலையைத் தீர்மானிக்கின்ற இரண்டு முக்கிய புள்ளி விவரங்களாகும். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதற்கேற்ப இத்திட்டம் இந்திய பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில் 15வது அம்சமாகும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நலத் திட்டமானது இந்தியாவில் 1975ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. சோதனைக் கட்டமாக (Pilot Project) 22 மாநிலங்களில் 33 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அப்போது தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில், நிலக்கோட்டைப் பகுதியும், தர்மபுரி மாவட்டத்தில் 'தளி' பகுதியும் சென்னை மாநகரத்தில் ஒரு புறநகர்ப்பகுதியும் தேர்வுசெய்யப்பட்டு 1975ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்தத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. 33 திட்டங்களில் 19 கிராமப் புறங்களிலும், 4 நகர்ப் புறப் பகுதியிலும், 10 மலைவாழ் மக்கள் பகுதியிலும் ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் திட்டம் ஆண்டுக்கொருமுறை மதிப்பீடு செய்யப்பட்டு, இந்திய அரசாங்கத்தின் திட்டக் குழுவினாலும், மருத்துவக் கல்லூரி மருத்துவர் குழுவினாலும் மதிப்பீட்டு அறிக்கையை அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது. சோதனைக் கட்டத்தில் வெற்றி கண்ட இந்தத் திட்டம், 1978-79ஆம் ஆண்டுகளில் மேலும் 200 திட்டங்கள் இந்தியா முழுவதும் துவக்கப்பட்டன. இந்த ஆறாவது ஆண்டுத் திட்டத்தில் 996 திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் 39 இடங்களில் இந்தத் திட்டம் மூலம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியப் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1975ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இவ்வட்டாரத்தில் 100 குழந்தைகள் நலக் காப்பகங்களின் மூலம் நலிவுற்ற குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் பயன்பெற்று வருகின்றார்கள். நிலக்கோட்டை வட்டாரத்திலுள்ள 188 கிராமங்களில் 2370 தாய்மார்களும், 6வது மாதம் முதல் 2 வயது வரை உள்ள 2843 குழந்தைகளும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள 5128 குழந்தைகளும், 751 முதியவர்களும் பயனடைந்து வருகிறார்கள்.

1982ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் திண்டுக்கல் நகராட்சிப் பகுதியில் இத்திட்டம் துவக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நகரில் 100 குழந்தைகள் நலக் காப்பகங்கள் மூலம் இத்திட்டம் செயல் படுத்தப்படுகின்றது.

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்**



6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உணவு, சுகாதார நிலையை உயர்த்துவது.

குழந்தைகளின் மனநிலை, உடல்நிலை, சமூக பழக்க வழக்கங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.

குழந்தைகளிடையே வளரக்கூடிய தொத்து வியாதிகள், இறப்பு விகிதங்கள், சத்துணவுக் குறைவு நிலைமை இவைகளை நீக்குதல்.

குழந்தைகள் பள்ளிக்குப் போகாத நிலைமையைப் போக்குதல்.

சத்துணவுக் கல்வி, சுகாதாரக் கல்வி, தாய்மார்களுக்குக் கல்வி முறையைக் கற்றுக் கொடுத்தல்.

### இத்திட்டத்தின் முக்கியப் பணிகள்

இணை உணவு
தடுப்புஊசி வைத்தியமுறைகள்
உடல்நலப் பரிசோதனை
தொடர்பராமரிப்புச் சிகிச்சை முறை
முறைசாரா முன் பருவக்கல்வி.
உணவு சுகாதாரக் கல்வி.

### திட்டத்தின் முக்கியப் பணிகள்

இணை உணவு:- இது ஆண்டுக்கு 300 நாட்கள் வரை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த இணை உணவின் மூலம் ஒரு குழந்தைக்கு 300 முதல் 400 கலோரி வரை கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய சத்துணவுப் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. மாலைக்கண் நோயைப் போக்க வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது. சோகையைப் போக்க குழந்தைகளுக்கும், கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன.

6 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு(சிஎஸ்எம்) புரதச்சத்து நிறைந்த சோயா பீன்ஸ் மாவு உருண்டை கொடுக்கப்படுகின்றது.

### கேர் உணவு

1984 ஜனவரி 9 முதல் 'கேர்' உணவு தொடங்கப்பட்டது. 6 வயதுமுதல் 2வயது முடிய உள்ள ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கான்சோயாபீன்ஸ் மில்க் (Corn Soya bean milk) 80 கிராமும், சாலிட் ஆயில் 7 கிராமும் அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும் கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும் 'கேர்' உணவு வழங்கப்படுகிறது.

இதன்மூலம் திண்டுக்கல் நகரில் பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 2,751. 2 வயது முதல் 5 வயது முடிய உள்ள குழந்தைகளுக்கு இணை உணவு கொடுக்கப்படுகிறது. இதனால் பயன்பெறும் குழந்தைகள் 3954. இந்த இணை உணவுப் பணியில், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்குப் பர்கர்வீட் என்ற கோதுமை ரவை கொடுக்கப்படுகிறது. இதனால் பயனடையும் கர்ப்பிணிப் பெண்களின் மொத்த எண்ணிக்கை 1382. பாலூட்டும் தாய்மார்கள் 1996 பேர் இந்தச் சிறப்புணவின் மூலம் பராமரிக்கப்படுகிறார்கள்.



மாண்புமிகு தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 790 முதியோர்களுக்குச் சிறப்புணவும், 2 வயது முதல் 5 வயது முடிய 3954 குழந்தைகளுக்குச் சிறப்புணவும் பெற்று, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி நலத் திட்டத்தோடு சேர்ந்து பயன் அடைந்து வருகிறார்கள். இந்த உணவுத் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் தினமும் 500 கலோரியும் 24 கிராம் புரதச் சத்தும் பெற்றுப்பயனடைகிறார்கள். இதன் மூலம் எடை குறைந்த நிலையில் குழந்தை பிறப்பது தவிர்க்கப்படுகிறது. ஒரு வயது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் நாள்தோறும் 300 முதல் 400 கலோரி மாவுச் சத்தும், 9ல் இருந்து 15 கிராம் புரதச் சத்தும் பெற்றுப் பயனடைகிறார்கள். சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட சவலை, நோஞ்சான் குழந்தைகள் தீவிர பராமரிப்பின்கீழ் கொண்டுவரப்படுகிறார்கள்.

### தடுப்பு ஊசி

குழந்தைகளுக்கு வரக்கூடிய, தொடரக்கூடிய தொற்றுநோய்கள் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இரணவாத ஜன்னி, இளம்பிள்ளை வாதம், மணல்வாரி அம்மை, காசநோய், ஆகியவற்றிலிருந்து தடுக்க தடுப்பு வைத்திய முறைகள் 1982ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் 6 வயதுக்குட்பட்டுள்ள 90 முதல் 95 சதவீத குழந்தைகளுக்கு மூன்றுமுறை தடுப்பு ஊசியும், இளம்பிள்ளைவாதம் தடுப்புச் சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது. மணல்வாரி அம்மை தடுப்பு ஊசி முகாம்கள் 1984-85ஆம் ஆண்டு முதல் திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட குழந்தைகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

### மருத்துவப் பரிசோதனை (உடல் நலப் பரிசோதனை)

இந்தப் பணி மூலம் குழந்தைகட்கு மாதந்தோறும் எடை எடுக்கப்பட்டு குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஆரோக்கியம் குன்றிக் குழந்தைகள் மீது தனிக் கவனம் செலுத்தி அவர்களின் உடல் நிலையைப் பரிசோதிக்க ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மருத்துவ அதிகாரியும், அவர்களுடன் தாய்மைத் துணைச் செவிலியர் நால்வரும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றனர். இதன் மூலம் பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 21,066 ஆகும்.

இந்த மருத்துவப் பரிசோதனைப்படி கர்ப்பிணிப் பெண்கள் கருத்தரித்த 16வது வாரத்திலிருந்து பதிவு செய்யப்பட்டு மாதா மாதம் அவர்களுக்கு இரும்புச் சத்து மாத்திரைகளும் வழங்கப்படுகின்றன. அத்துடன் இரணவாத ஜன்னி சிசுக்களைப் பாதிக்காமல் இருக்க கர்ப்பிணிப் பெண்களுக்கும் டெட்டனஸ் டாக்ஸாய்டு என்ற தடுப்பு ஊசியும் போடப்படுகிறது. கர்ப்பக் காலத்தில் விளைவுகள் ஏதும் வராமல் பார்த்துக் கொள்ள மாதாமாதம் மருத்துவப் பரிசோதனையைத் தாய்மைத் துணைச் செவிலியர் நால்வரும் செய்து வருகிறார்கள்.

கர்ப்பிணிகளுக்கு இன்னல்கள் ஏதாவது ஏற்பட்டால் தாய்மைத் துணைச் செவிலியரால் தீவிர மருத்துவப் பரிசோதனைக்காக திண்டுக்கல் மருத்துவ மனையின் மகப்பேறு மருத்துவப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள் 1382 பேர் பதிவு செய்யப்பட்டதில் 1095 பேர் இதன்மூலம் பயனடைகிறார்கள். பாலூட்டும் தாய்மார்களுக்குச் சோகையைத் தவிர்க்க இரும்புச் சத்து மாத்திரைகள் மாதா மாதம் கொடுக்கப்படுகின்றன. பாலூட்டும் தாய்மார்கள் முதல் 4 மாதம் தீவிர பரிசோதனை செய்யப்படுகிறார்கள். 1489 குழந்தைகளுக்குக் குடற் புழுவை நீக்கும் மருந்துகள் இதுவரை வழங்கப்பட்டு வருகின்றன. வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் வழங்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு ஏற்படும் காலங்களில் உடலில் ஏற்படும் வறட்சியைத் தடுக்க உப்புச் சர்க்கரை நீர் கலந்து கொடுக்கப்படுகின்றது. இந்த வயிற்றுப் போக்கினால் குழந்தைகட்கு ஏற்படும் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைக்கப்படுகிறது.

**தொடர் பராமரிப்பு:**

சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளும், தீவிர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையின் குழந்தைகள் நலப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். மேல்நிலை தீவிர மருத்துவப் பரிசோதனைக்குக் மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் குழந்தைகள் நலப் பிரிவிற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

**முறைசாரா முன்பருவக் கல்வி:**

இந்த முக்கியப் பணியில் 3 வயது முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயனடைகிறார்கள். இந்தப் பணியின் மூலம் 10,174 குழந்தைகள் பயனடைகிறார்கள். தினமும் இக்குழந்தைகளுக்கு 3 மணி நேரம் கல்வி போதிக்கப்படுகிறது. உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, சுகாதாரப் பழக்க வழக்கங்கள், பாட்டுக்கள், கதைகள் வாய்மொழிக் கல்வி ஆகியவை கற்றுத்தரப்படுகின்றன.

திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள் 100 மையங்கள் மூலம் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த 100 மையங்களில் 15 வயது முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்களுக்குச் சுகாதாரம் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. மேலும் தாய்ப்பாலின் முக்கியத்துவம், இணை உணவின் முக்கியத்துவம், நோய் வரும் காலங்களில் குழந்தைகளைப் பராமரிக்கும் விதம், நோய் வராமல் தடுக்கும் தடுப்பு வைத்திய முறைகள் சுற்றுப்புற சுகாதாரக் கல்வி ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. அங்கன்வாடி பணியாளர்கள் அவரவர்கள் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று, நோய்த் தடுப்பு முறைகள் குழந்தைகள் பராமரிப்பு, குடும்பநலத் திட்டம் ஆகியவை விளக்கிக் கற்றுத்தரப்படுகின்றது.

''ஒளி படைத்த கண்ணினாய்
வா! வா! வா!
உறுதி கொண்ட நெஞ்சினாய்
வா! வா! வா!''


பாரதி கண்ட கனவு நனவாகும் வகையில், உள்ள வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் கொண்ட இளைய சமுதாயத்தினைக் காணுதற்கு இத்திட்டம் பெரிதும் துணையாகிறது.

**அண்ணா மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி**

அண்ணா மாவட்டத்தில், மிகச் சிறிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் அதிக வருமானம் கொடுக்கக்கூடிய பட்டுத் தொழிலை விரிவாக்கும் வகையில் பட்டுத் தொழில் புரியும் விவசாயிகளுக்கு ரூ. 7½ இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல், வேடச்சந்தூர், பழனி, நத்தம், நிலக்கோட்டை, கொடைக்கானல் ஆகிய தாலுக்காக்களில் உள்ள விவசாயிகள் பட்டு வளர்ப்புத் தொழிலில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

பட்டு வளர்ப்புத் தொழிலை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் திண்டுக்கல்லில் நிர்வாக அலு



வலகம், பட்டுக்கூடு அங்காடி, பட்டு விற்பனையகமும், கிராமிய பட்டு நூற்பு பயிற்சி நிலையமும், பழனி, வடமதுரை, நிலக்கோட்டை ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் நுட்பச் சேவை மையமும், வேடசந்தூர், கன்னிவாடி, வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் பட்டுத் தொழில் விரிவாக்க அலுவலகமும், நத்தத்தில் முன்னோடி சேவை மையமும், பூம்பாறை (கொடைக்கானல்)யில் பட்டு வளர்ச்சி மையமும் செயல்பட்டு வருகிறது. இம்மையங்கள் மூலம் விவசாயிகளுக்குப் பட்டுப் புழுக்களை இரண்டாம் தோலுரிப்பு வரை (முதல் ஏழு நாட்கள்) அரசின் கண்காணிப்பில் இலவசமாக வளர்த்து வழங்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 40 விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்பதற்குரிய மனை கட்டுவதற்குத் தலா ரூ. 3,000 வீதம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயும், பட்டுத்தொழிலுக்குரிய தளவாடச்சாமான்கள் வாங்குவதற்கு தலா ரூ.2 ஆயிரம் வீதம் ரூ.80 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் தலா ரூ. 1200 வீதம் மானியத் தொகையாக ரூ.48 ஆயிரம் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 75 விவசாயிகளுக்குப் பட்டுப்புழு வளர்ப்புத் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிக் காலத்தில் தலா ரூ.500 வீதம் ரூ. 37,500 உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது. பட்டுத் தொழில்புரியும் 100 விவசாயிகளுக்கு மானியம் இல்லாத கடன் தொகையாக தலா ரூ.5 ஆயிரம் வீதம் ரூ. 5 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பட்டுத் தொழில் புரியும் 250 விவசாயிகளுக்குக் குச்சி மானியமாக ஏக்கர் ஒன்றிற்குத் தலா ரூ. 100 வீதம் ரூ. 25 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

**டி.பி.எஸ். சுந்தரநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**அண்ணா மாவட்டம்**
**திண்டுக்கல்.**




## கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்

ஆசிரியர்: மன்னர் மன்னன்,

வெளியீடு: முத்துப் பதிப்பகம்
269, புதுவை கிழக்குச்சாலை,
விழுப்புரம்-605 602

விலை: ரூ. 75 பக்கம்: 472

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 72 ஆண்டு வாழ்க்கை ஏட்டில் 54 ஆண்டுக் கால வாழ்க்கை வரலாற்றை இந்நூல் எடுத்துச் சொல்கிறது. பாவேந்தரின் மகனான மன்னர் மன்னனே இந்நூலை எழுதியிருப்பது நூலுக்குத் தனிச் சிறப்பு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அளித்துள்ள அணிந்துரை மற்றொரு சிறப்பு.

பாவேந்தரின் முன்னோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரைக் குறித்த செய்திகள் பல விரிவாகவும் ஆதாரபூர்வமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. பாவேந்தர் இறை வழிபாட்டுணர்வில் வாழ்ந்த காலத்தில் எழுதிய கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

தேச பக்தி கொண்டவர் பாவேந்தர் என்பதற்குப் பல்வேறு சான்றுகளையும் கவிதைகளையும் எடுத்துக் காட்டியுள்ளார், நூலாசிரியர். இவை எல்லாம் அரிய கருவூலங்கள் ஆகும். இவற்றைத் தேடிப் பிடித்து வெளிக் கொணர்ந்திருப்பதிலே - நூலாசிரியரின் ஈடுபாடும் பேருழைப்பும் தெற்றென விளங்குகிறது.

பாவேந்தர் திரைப்பட வசன ஆசிரியர் -பாடலாசிரியர் என்ற விவரங்களையும்-அவர் ஓர் ஓவியர் என்ற செய்தியையும் நூலாசிரியர் தக்கபடி விளக்கியிருக்கிறார்.

நூல்களைச் சமைப்பதில் மட்டுமல்ல; உணவைச் சமைப்பதிலும் பாவேந்தர் வல்லவர் என்பதை இந்நூலின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

பாரதியார் - பாரதிதாசன் தொடர்பு, இருவர்க்கும் இடையே இருந்த அன்புறவு அனைத்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பலர் பலவிதத்தில் கற்பனையாகச் சொல்லி வரும் செய்திகளை மறுத்து, ஆதாரபூர்வமான செய்திகளை நூலாசிரியர் வழங்கியிருக்கிறார்.

பாவேந்தர் சுயசரிதை எழுதாது சென்று விட்ட குறையை நூலாசிரியர் போக்கியுள்ளார். பிறப்பினால் மட்டுமல்ல - சுவையான எழுத்தினாலும் தான் பாவேந்தரின் வாரிசுதான் என்பதை நிரூபித்திருப்பதுடன் மகன் தந்தைக்காற்ற வேண்டிய உதவியைத் தக்க விதத்தில் ஆற்றியிருக்கிறார் நூலாசிரியர்.

நூலின் இடை இடையே - பாவேந்தருடன் தொடர்பு கொண்ட பெரு மக்களின் புகைப் படங்களையும் தேடிப் பிடித்து வெளியிட்டிருப்பது பாராட்டுக்குரியது மட்டுமல்ல, நூலாசிரியரின் கடின உழைப்புக்கும் சான்று பகர்வதும் ஆகும்.

எளிய இனிய நடையில், நிகழ்ச்சிகளைச் சுவையாகச் சொல்லி, பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றை வார்த்தை ஓவியமாக்கி நமது நெஞ்சச் சுவரில் பதித்து விடுகிறார் நூலாசிரியர்.

பாவேந்தரைப் பற்றி அறிய விரும்புவோர், அவசியம் படிக்க வேண்டிய நூல்.

— தமிழ்ப்பித்தன்

## பாலராமாயணம்

ஆசிரியர் : பண்டித கல்யாண ராமன்

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி,
த.பெ.எண்.617, மயிலாப்பூர்
சென்னை-600004.

விலை: ரூ. 8.50 பக்கம்: 108

வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி முறைகளைக் கூறும் இலக்கியங்கள், புராணங்கள் முதலானவை தமிழில் ஏராளமாக உள்ளன. அவற்றுள் ஒன்றான இராமாயணம், உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லோராலும் போற்றப்படுகின்றது.

'இராமாயணமா? அவ்வளவு பெரிய நூலை நாங்கள் படிக்க முடியுமா?' என்று குழந்தைகள் யாரும் ஏங்க வேண்டாம். 'பாலராமாயணம்' உங்கள் ஏக்கத்தைப் போக்கும் வகையில், எளிய நடையில் இராம கதையை அழகாகச் சித்திரிக்கிறது. நூலின் இறுதியில் இராம கதை கூறும் நீதிகள் பற்றிக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

## பாரதியின் குயில் பாட்டு

ஆசிரியர்: டாக்டர் மின்னூர் சீனிவாசன்,

வெளியீடு: மின்னூர் வெளியீடு,
22/7, தீர்த்தாரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600005.


விலை: ரூ. 10 பக்கம்: 128.

மகாகவி பாரதியின் அரிய படைப்புகளில் குயில் பாட்டும் ஒன்று. அது கருத்தாழமும், பொருளழகும் கொண்டது. கவிதை நயம் மிக்க இந்தக் குயில் பாட்டை அலசி ஆராய்ந்து அன்னைத் தமிழுக்கு அணியாரம் சூட்டியிருக்கிறார் ஆசிரியர் மின்னூர் சீனிவாசன்.

'குயில் பாட்டு பாரதியாரின் ஆன்மீக வாழ்வில் பெற்ற ஒரு நிறைவைக் காட்டுகின்றது - குயில் பாட்டில் இயற்கையின் அழகும் விந்தையும் பாடப்பட்டிருக்கின்றன - பாரதியாரின் குயில் பாட்டு, கதைத் தொடருக்காகத் தோன்றிய எளிய கவிதையன்று; கருத்து - உட்பொருள், தத்துவம், வேதாந்தம் ஆகிய செய்திகளைக் கூற ஓர் ஊடகமாக அமைந்த படைப்பு' என்று ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிட்டு, பல்வேறு இலக்கியக் கருத்துக்களை மேற்கோள் காட்டி தம்முடைய ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்தியிருக்கிறார். நூல் முழுவதும் தமிழ்மணம் கமழ்கிறது. தமிழ் அன்பர்க்கும், ஆராய்ச்சி மாணவருக்கும் சிறந்த கையேடாகக் காட்சியளிக்கிறது இந்நூல்.

— பி. வி. கிரி


ஆடைகளை
நீண்டநாள் பாதுகாக்க,,
இயற்கை தரும்
மூலப் பொருட்களைக் கொண்டு
தயாரிக்கப்பட்ட
கோபுரம்
சலவை சோப்பு
விலையில் குறைந்தது !
தரத்தில் உயர்ந்தது !
WASHING SOAP
GOPURAM
A PRODUCT OF TAMILNADU KHADI
VILLAGE
GOPURAM SOAP
தமிழகம் முழுவதும் உள்ள
அனைத்து காதிகிராப்ட் களிலும்
கிடைக்கும்.
தமிழ்நாடு
கதர் கிராமத்
தொழில் வாரியம்
சென்னை-600 108.



# மாணவர்



# நாளை உனதே!

தமிழன்பன்

அன்பு ஒழுக்கம் சேவை
        அரிய பண்புகள் யாவும்
சின்ன வயதினி லிருந்தே
        சேர்ந்து வளரணும் தம்பி!

ஒன்று பட்ட உலகே
        ஒவ்வொரு நாளும் கனவாய்
நின்று நிலைபெற வேண்டும்
        நினைவில் கொள்வாய் தம்பி!

உன்னால் இந்த உலகம்
        உயரும் நாளை எண்ணி
நன்றே பாடு படுவாய்
        நாளை உனதே தம்பி!

## கம்ப்யூட்டர் விந்தைகள்

இன்றைய அறிவியல் ஆய்வுகளில் கம்ப்யூட்டர்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. மொழி வேறுபாடு இல்லாத கம்ப்யூட்டர் இருப்பது 0, 1 என்ற மொழி மட்டுமே . அது எந்த நாட்டுக் கம்ப்யூட்டராயும் இருக்கலாம். இக் கம்ப்யூட்டர்களின் சாதனைகள் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஐந்தாவது தலைமுறை -கம்ப்யூட்டர்களில் Prolog என்று சொல்லக்கூடிய மொழியைப் புகுத்தி அறிவியல் வளர்ச்சியில் அரிய சாதனையைப் புரிவதில் ஜப்பானியர்கள், தற்போது ஈடுபட்டுள்ளார்கள். Logic programming எனும் Prolog மிக வேகமாக வளர்ந்து வருகிறது.

இன்று பழக்கத்திலுள்ள, Paseal basic fortran போன்ற வகைப்படுத்தும் மொழிகளில், ஒவ்வொரு கணக்கும், தீர்க்க வேண்டிய முறை, தெளிவாக்கப் பட்டால் மட்டுமே, முடிவு கிடைக்கும். அதாவது வகைப்படுத்துபவர் (Programmer) தீர்க்கவேண்டிய கணக்கை மட்டும் சொன்னால் போதாது. அக்கணக்கை Paseal, Basic, Fortran இவைகளில் ஏதாவது ஒரு மொழிக்கு மாற்றி தீர்க்க வேண்டிய ஒவ்வொரு வரியையும் முறையாகச் சொல்ல வேண்டும்.

ஆனால் Prolog மொழி மற்ற மொழிகளிலிருந்து வேறுபட்டு, தர்க்கரீதியாக உள்ளது. சட்டரீதியான உண்மைகள் அடங்கியுள்ள இம் மொழியில் அடுக்கடுக்கான கேள்விகள் கேட்கப்பட்டு உடனுக்குடன் பதில் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இம்மொழி பழக்கத்திற்கு வரும் பொழுது கம்ப்யூட்டர் எனும் இயந்திரம் பல நன்மைகளைச் செய்ய உள்ளது.

கம்ப்யூட்டர்களைக் கொண்டு வளமிக்க நவீன வீடுகளை அமைக்கும் முயற்சி அமெரிக்காவில் மூன்று இடங்களில் நடைபெற்றுள்ளது. Taxes, Brookline, Fores-Hill ஆகிய இடங்களில் இந்த மாதிரி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான நவீன வீடுகளில் குளிக்கும் தொட்டிகளில் தொலைபேசி வசதிகள், வானொலித் தொடர்பு, கம்ப்யூட்டரால் இயங்கக்கூடிய உடற்பயிற்சி சாதனங்கள் போன்ற வசதிகள் கிடைக்கின்றன. அதோடு, இந்த உடற்பயிற்சி சாதனங்களால் எந்த அளவு பயனடைந்துள்ளோம் என்று புள்ளிவிவரங்கள் அடங்கிய பட்டியலும் அவ்வப்போது கொடுக்கப்படுகிறது. படுக்கும் கட்டிலிலேயே வானொலி, தொலைக்காட்சி, குளிக்கும்வசதி நீராவியை ஏற்படுத்தி சூடான சூழலை உண்டு பண்ணுதல், தானியங்கி குளிர்சாதனப்பெட்டியை அமைத்தல், குறிப்பிட்ட நேரத்தில் பாத்திரத்தைச் சுத்தம் செய்தல், குழந்தைகளுடைய சுவாசம், இதயத்துடிப்பு ஆகியவை மாறுபடும்பொழுது அவற்றை முன் அறிவித்தல் ஆகிய எல்லாப் பணிகளையும் இந்த நவீன வீடுகளில் உள்ள கம்ப்யூட்டர்கள் செய்கின்றன.

வீட்டை வெப்பப்படுத்தும், குளிரவைக்கும் சாதனங்களைக் கட்டுப்படுத்துதல், பாதுகாப்பை முறைப்படுத்துதல் போன்ற பணிகளையும் கவனிக்கிறது இக்கம்ப்யூட்டர். நாடைபாதையில் போடப்பட்டுள்ள விரிப்புக்குக் கீழே துல்லியமான, குரல் கண்டு பிடிக்கப்படும் கருவி, ஜன்னல், கதவு ஆகியவற்றில் சப்தமிடும் கருவிகள் ஆகியவை கம்ப்யூட்டரால் காக்கப்படுகின்றன. சனி, ஞாயிறு போன்ற விடுமுறைநாட்களில், வீட்டைப்பற்றிக் கவலையில்லாமல் வெளியூர் செல்ல இவ்வமைப்பு உதவுகிறது. வீட்டிற்குள் திருடன் நுழைந்ததும் சப்தமிட்டு போலீஸை இக்கம்ப்யூட்டர் வரவழைத்துவிடும்

—நன்றி : வானொலி

# பக்கம்

## அறிவுச் சுடர்

* தட்டச்சுப் பொறியை ஹென்றி மில் என்பவர் 1714-ல் கண்டுபிடித்தார்.

* 'தமிழ் நாடகத் தந்தை' எனப் போற்றப்படுபவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார்.

* 'விஜய நகரப் பேரரசு' ஹரிஹரர், புக்கர் என்பவர்களால் 1336-ஆம் ஆண்டு நிறுவப் பட்டது.

* பஞ்சாப் "இந்தியாவின் தானியக் கிடங்கு" என அழைக்கப்படுகிறது.

* இந்தியாவின் மிக நீளமான ஆறு பிரம்மபுத்திரா ஆகும்.

* மேற்குத் தொடர்ச்சி மலையில் மிக உயர்ந்த சிகரம் 'ஆனை முடி' ஆகும். உயரம் 2,703மீ.



பாவிகளே! என்று மனிதர்களை அழைப்பது பாவமாகும். மனித இயற்கைக்கு அது ஒரு பழிச் சொல்லாகும் ஓ, சிங்கங்களே, எழுந்திருங்கள்! என்றழையுங்கள்.

—விவேகானந்தர்

* இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதி 'கானிங் பிரபு' ஆவார்.

* 'வெடி வழிபாடு' உள்ள ஒரே கோவில் குமரி மாவட்டம் குழித்துறை அருகே உள்ள சாஸ்தா கோவில் ஆகும்.

* நாய்க்குடை, காளான் போன்றவை, தானே உணவை தயாரிக்க முடியாது.

* காந்தக் கல்லைத் திசை காட்டும் கல்லாக முதன் முதல் சீனர்கள் பயன்படுத்தினர்.

**ந. பாலாஜி**
**பதினோராம் வகுப்பு 'ஈ' பிரிவு,**
**த.பி.சொ. அரசு மேல்நிலைப்பள்ளி,**
**பாவூர் சத்திரம், நெல்லை மாவட்டம்.**



# தம்பிக்கு

அரக்கோணம்

சங்கரபாண்டியன்

வாழ்வை வெல்வோம்—தம்பி
வறுமையை ஒழிப்போம் தம்பி
தாழ்வைக் களைவோம்—தம்பி
தலைவர்கள் ஆவோம் தம்பி!

முயற்சிகள் செய்வோம்—தம்பி
முனைந்து உழைப்போம் தம்பி
பயிற்சிகள் பழகுவோம்—தம்பி
பண்பை வளர்ப்போம் தம்பி!


உயர்ந்து காட்டுவோம்—தம்பி
உலகை ஆளுவோம் தம்பி
அயர்வை அகற்றுவோம்—தம்பி
அன்பைப் போற்றுவோம் தம்பி!

## பெரியார் மாவட்டத்தில்

# கூட்டுறவு நூற்பாலை

பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை 1963ல் 13 ஆயிரம் கதிர்களுடன் 91லட்சம் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1975-ம் ஆண்டு 25 ஆயிரம் கதிர்களாக உயர்த்தப்பட்டது. அதற்கு, ஒரு கோடியே 15 லட்ச ரூபாய் செலவு ஆனது. அன்றைய மதிப்பு உபகரணங்களுடன் ரூ 3 கோடியே 96 லட்சம் ஆகும். இன்றைய மதிப்பு 18 முதல் 20 கோடி ரூபாய் ஆகும். தற்போது 888 தொழிலாளர்கள் இங்கு பணி புரிகின்றனர்.

இந்த ஆலைக்கு அரசு 74 லட்ச ரூபாய் முதலீடு செய்துள்ளது. சிறந்த நிலையான நூல்களை நியாய விலையில் தருவதற்கென்றே இந்த ஆலை தொடங்கப்பட்டது. இங்கு தயாராகும் நூல் தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த ஆலையில் தற்போது நாளொன்றுக்கு 6328 கிலோ நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதத்திற்கு 1 லட்சத்து 96 ஆயிரம் கிலோ நூல் உற்பத்தியாகிறது. 1984-ஆம் ஆண்டு மிக அதிக உற்பத்தியாக 1 கதிருக்கு 89 கிராம் நூல் தயாரிக்கப்பட்டது. 85-ஆம் ஆண்டு மட்டும் இந்த விற்பனையில் 26 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. இந்த ஆண்டு 27 லட்சம் ரூபாய் லாபம் திரட்டக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 மாதத்தில் மட்டும் 4 லட்ச ரூபாய் லாபம் கிடைத்துள்ளது.



52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஆலையில் ஸ்டோர் வசதியும், கடன் வழங்கும் சங்கமும் உள்ளன. தொழிலாளர்கள் சிரமமின்றி ஆலைக்கு வருவதற்காக அவசியப்பணியாளர்களுக்கு 12 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு இரவு நேரத்தில் தேநீர் இலவசமாக வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கென மருந்துச் செலவிற்காக 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆலை மூலம் லாபத்தை அதிகரிக்கச் செய்வதற்காக 22 லட்ச ரூபாய் செலவில் ஒரு சைசிங் மில் தொடங்கப்பட்டுள்ளது. 11 லட்ச ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியமாகவும் 11 லட்சம் ரூபாய் தமிழக அரசு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக மானியமாகவும் அளிக்கப்படும். இங்கு வேலைக்கு அமர்த்தப்பட உள்ள 40 ஊழியர்களில் 57 சதவீதம் ஆதிதிராவிடர்கள் அமர்த்தப்படுவர். மாதம் ஒன்றுக்கு 30 பீம் நூல் தயாராகும். அது விசைத் தறிக்கு அனுப்பப்படும்.

1,400 கிலோ வாட் திறன் உள்ள ஜெனரேட்டர் இங்கு இருப்பதால் 100 சதவீத மின் வெட்டையும் கூடச் சமாளிக்கும் திறன் இந்த கலைக்கு உள்ளது. தமிழக டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள காட்டன் சில்க் என்ற கமிட்டி மூலம் இந்த ஆலைக்குத் தேவையான பஞ்சு தரப்படுகிறது. இங்கு தயாராகும் நூலில் 60 சதவீதத்தை கோ-ஆப்-டெக்ஸ் வாங்கிக் கொள்கிறது. 40 சதவீதத்தை நெசவாளர் சங்கங்கள் பெற்றுக் கொள்கின்றன. ஆலையில் தயாராகும் நூல் ஐ. எஸ். ஐ. தரம் பெற்றதாகும். ஆர்டரின் பேரில் பாலிஸ்டர் நூலும் தயாரித்துக் கொடுக்கப்படுகிறது.

**நா. தில்லைகோவிந்தன்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

## பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்

# ஓராண்டு வளர்ச்சிப் பணிகள்

நிர்வாக வசதிகளை முன்னிட்டு பெரிய மாவட்டங்களைப் பிரித்துப் புதிய மாவட்டங்களை, உருவாக்கி வருகிறார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இராமநாதபுர மாவட்டத்தைப் பிரித்து, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராசர் மாவட்டம் ஆகியவற்றை1984 ஜூலைத் திங்களில் தொடங்கி வைத்தார் முதல்வர். முறைப்படி 16.4.1985ல் மாவட்டம் உருவாகியது. ஓராண்டுக் காலத்துக்குள் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அவற்றில் ஒரு சில வருமாறு:

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு பல திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பாதி ஊதியம். பணமாகவும், அரிசி, கோதுமையாகவும் வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப் படுகின்றது. காடு வளர்ப்பு 55 இடங்களிலும், தொகுப்பு வீடுகள் 223ம், சமுதாயக் கூடம் 8ம், கிராமச்சாலைகள் 85ம், சாலைப் பாலங்கள் 53ம், சேமிப்புக் கிடங்குகள் 5ம், தடுப்புச்சுவர்கள் 3ம், குடி தண்ணீர் வசதி 2ம், பள்ளிக் கட்டடங்கள் 3ம், கால் நடை மருந்தகங்கள் 2ம், கட்டப்பட்டுள்ளன. பயன்படுத்தப்பட வேண்டிய மனித உழைப்பு நாட்கள் 4.025 இலட்சம். இலக்கை எஞ்சி 4.380 இலட்சம் மனித உழைப்பு நாள் பயன்படுத்தப் பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

ஊரகப் பகுதிகளில் உள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்தில் குறைந்தது 100நாட்களாவது வேலை வாய்ப்பு கொடுக்கும் நோக்கில் மைய அரசினரால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு எல்லாமே மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தினக்கூலியாக 1கிலோ அரிசி, 2 கிலோ கோதுமையு வழங்கப்படுகிறது. பொதுப் பணித்துறை மூலம் 511 பணிகளும், நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலை வேலைகள் 21ம், கசிவு நீர் குட்டைகள் பணி 19ம், தொகுப்பு வீடுகள் 340ம் முடிக்கப்பட்டுள்ளன. இது வரை இத்திட்டத்திற்கு ரூ. 155 இலட்சங்கள் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.140 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 8.87 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 6.7 இலட்சம் மனித உழைப்பு நாள் பெறப்பட்டுள்ளது.

**புவியியல் மற்றும் சுரங்கம்**

மானாமதுரையில் கிடைக்கும் நல்லதரமுள்ள களிமண் மணலைக்கொண்டு 15 செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் காளவாசல்கள் இயங்கி நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

பூவந்திக் கிராமத்தில் சுமார் 8000 டன்க்ள் அளவில் உயர்ந்த சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. பாவனக்கோட்டை கிராமத்தில் 'கன்கர்' எனப்படும் கொக்கி கல் கிடைக்கிறது. சுண்ணாம்பு தயாரிக்கும்காளவாசல் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 40 இலட்சம் டன்கள் வெள்ளை மற்றும் வண்ணக் களிமண் சிவகங்கை தாலுக்காவில் கிடைக்கிறது. காவி வண்ணம் தயாரிக்கும் தொழிற்சாலை சிவகங்கையில் இயங்கி வருகிறது.

**வி. புண்ணியமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

**குடும்ப நலத்திட்டம் (லேபராஸ் கோபிக்)**

மாவட்டம் தனியாக உருவாக்கப்பட்டதிலிருந்து ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் செயல்பட்டு வரும் ஆதார நல நிலையங்கள், ஐந்து நகர்ப்புற குடும்பநல மையங்கள் மற்றும் திருப்பத்தூரிலுள்ள 'சுவீடிஸ்' மருத்துவமனை ஆகியவற்றில் அறுவைச் சிகிச்சை மற்றும் கருத்தடை வளையம் வைப்பு முதலான வசதிகள் எல்லா நாட்களிலும் மக்களுக்குக் கிடைக்கப் பெறுகிறது. அரசு மருத்துவமனைகளில் 40 நவீன அறுவைச் சிகிச்சை முகாம்கள் மூலம் 10,718 நபர்களுக்கு லேபராஸ் கோபிக் (நவீன குடும்பநல அறுவை) சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**பொதுச்சுகாதாரம்**

பொதுச்சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத் துறையில் பல நோக்குச் சுகாதாரத் திட்டத்தின் மூலம் தாய் நலப் பிரிவின் கீழ் 14,572 கர்ப்பிணிகள் பதிவு



செய்யப்பட்டு 7527 பேருக்கு இரத்தப் பரிசோதனை செய்து மருத்துவஉதவியும் 2506 பேருக்கு சுகாதாரப் பணியாளர்களால் பிரசவமும் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 9482 பிரச வித்த பெண்களுக்கு மருத்துவ சேவை வழங்கப்பட்டுள்ளது. 27,275 குழந்தைகளுக்கு இளம் பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டு மருந்தும், 25,696 குழந்தை களுக்கு முந்நோய்த் தடுப்பு ஊசி யும், 99,630 குழந்தைகளுக்கு 'டைபாய்டு' காய்ச்சல் தடுப்பு ஊசியும், 95,284 குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' திரவமும் வழங் கப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

இம்மாவட்டத்தில் நெல் 63 சதம், சிறுதானியம் 9 சதம், பயறுவகை 9 சதம், எண்ணெய் வித்துக்கள் 12 சதம், காய்கறி 5 சதம், கரும்பு 2 சதம் என்ற சதவிகிதத்தில் பயிராகிறது. இம் மாவட்டத்தில் எப்போதும் இல் லாத அளவில் 19,800 எக்ட ரில் சிறுதானியப் பயிர்கள் சாகு படிக்குக் கொண்டு வந்து நெல் சாகுபடிப் பரப்பின் குறை பாடு சரிக் கட்டப்பட்டது. மழைகுறைந்த கண்மாய்களில் போதிய அளவு தண்ணீர் நிரம் பாததால் 67,725 எக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள் ளது. அரிசி 1.13589 டன்னும், சிறுதானியம் 43150 டன்னும், பயறுவகை 16438 டன்னும் பருத்தி 1694 பேல்கள், கரும்பு வெல்லம் 38700 டன்னும் உற் பத்தி செய்யப்பட்டுள்ளன.

**தொழில்துறை**

தொழிலில் பின் தங்கிய மாவட்டமாக உத்தரவிடப் பட்டு தொழில் துவங்குபவர்க்கு 15 சதவீதம் மத்தியஅரசுமானிய மாக வழங்கி வருகிறது. புதிய மாவட்டமாக இருப்பதால், அரசு அலுவலகங்கள் கட்டுவதற் கும், அரசு அலுவலர்கள் தங் குவதற்கும் வீடு கட்டுவதற் கும் உரிய செங்கல் சூளை தயாரித்தல் மற்றும் தொழில் நுட்பத் தொழிலாகிய 'டிரில்ஸ்' 'கிரில்ஸ்' முதலிய தொழில்கள் மொசைக் இண்டஸ்ட்ரிஸ், தச்சுத் தொழில்கள் ஆகிய தொழில்களும், இம்மாவட்டத் தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இவ்வாண்டு தொழில்கள் துவங்குபவர்க்கு பிப்ரவரி'86 முடிய ஏறத்தாழ 400 தற் காலிகச் சிறு தொழில் சான்றி தழ்களும், 150 நிரந்தரச் சிறு தொழில் சான்றிதழ்களும் வழங் கப்பட்டுள்ளன. இந்தியப் பிரத மர் அவர்கள் வழங்கிய சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் 500 பேருக்கு ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சம் ரூபாய் வழங்கப்பட் டுள்ளது. கிராமதொழில் திட்டக் கடன் மூலமாக இயந்திரங்கள் மற்றும்கட்டடங்கள்கட்டுவதற்கு ரூபாய் 1 இலட்சம் குறைந்த வட்டியில் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி இறுதி வகுப்பில் 50சத வீதம் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு வெக்கேஷனல் பயிற்சி, இம்மாவட்டத்திலுள்ள 7 தட்டச்சுப் பயிற்சி நிலையங் களில் பயிலும் 20 பெண்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி உதவிப் பணம் மாதம் ரூ. 15 வழங்கப் பட்டுள்ளது. ரூ.3000 க்கு குறை வான வருடவருமானமுள்ள 180 விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங் களும் / நோட்டுப் புத்தகங்களும் ரூ.6788.25க்கு வழங்கப்பட் டுள்ளன. 30 விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தங்ககளும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படவுள் ளன. விதவைகள் மகள் திரு மணத்திற்கு ரூ.1000 வீதம் 40 பேருக்கு ரூ. 40,000 வழங் கப்பட்டுள்ளது. 5 ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு ரூ.5000 வழங்கப்பட்டுள்ளது.

விதவைகள் மறுமணத் திட்டத் தின் கீழ் 5 பேருக்கு ரூ.5000/- வீதம் அஞ்சலக தேசிய சேமிப் புப் பத்திரம் வழங்கப்பட்டுள் ளது. மானாமதுரையில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் பரா மரிப்பு இல்லத்தில் 250 ஆதர வற்ற குழந்தைகள் உள்ளனர். 5 ஊனமுற்றவர்களுக்கு 3 சக்கர வண்டிகளும், 2 ஊனமுற்றோ ருக்கு 2 சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டுள்ளன. இம்மாவட் டத்தில் 330 மகளிர் மன் றங்கள் செயல்பட்டு வருகின்றன. பயிற்சி மற்றும் உற்பத்திதிட் டத்தின் கீழ் திருப்பாச்சேத்தி யில் கம்பளிப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. மாதம் ரூ.30/- உதவித் தொகை கொடுத்து 15 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



**பட்டுத் தொழில் வளர்ச்சி**

இம்மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும், மாநிலத் திட்டத்தின் கீழும் விவசாயி களுக்கு முசுக்கொட்டைச் செடி நடவும் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப்பட இருக்கின்றன. குன்றக்குடி, முத்தனேந்தல், சாலைக் கிராமம், கழனிவாசல், காளையார்கோவில், தமராக்கி, லாடநேந்தல் ஆகிய இடங் களில் மாதிரி மல்பரி பட்டுப் பண்ணையும், முறையூர், ஓ. புதூர் ஆகிய இடங்களில் இளம் புழு வளர்ப்பு மையமும், கம்ப னூரில் பட்டுக் கிராமமும், சிவ கங்கையில் அரசு பட்டுக்கூடு அங்காடியும் உள்ளன. கம்பனூ ரில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு குக்கிராமம் நிறுவப்பட்டு 100 ஆதிதிராவிடர் குடும்பங் களுக்கு வேலை வாய்ப்பும், 100 பேருக்கு குடியிருப்புகளும் கட்டப்படவுள்ளன. இது வரை ரூ.2 இலட்சம் செலவிடப்பட் டுள்ளது. மானாமதுரையில் உள்ள நூற்புப் பயிற்சி நிலையத் தில் விவசாயிகளிடமிருந்து 8000 கிலோ அளவிற்குப் பட்டுக் கூடுகள் கொள்முதல் செய்யப் பட்டு 700 கிலோ நூல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 170 பட்டு விவசாயிகளுக்குப்பட்டு வளர்ப்பு சம்பந்தமான பயிற்சி அளிக்கப் படுகிறது. இந்த ஆண்டு 125 ஏக் கரில் 213 விவசாயிகள் மல்பரி நடவு செய்துள்ளனர். இதில் 33 பேர் ஆதிதிராவிடர்கள்.

**சிவகங்கை 'கிராபைட்' திட்டம்**

சிவகங்கை அருகிலுள்ள புதுப் பட்டி, குமாரப்பட்டி, சேந்தி உடையநாதபுரம் ஆகிய கிராமங் களில் சுமார் 1000 ஏக்கர் பரப் பளவில் கிராபைட் கிடைக் கிறது. உலகத்திலேயே மிகச் சிறந்த 'மடகாஸ்கர்' வகை கிராபைட்டுடன் ஒப்பிடத்தக் கது. இந்த 1000 ஏக்கர் நிலப் பரப்பில்-477 ஏக்கர் தனியாருக் குச்சொந்தமான நிலம். இதை நில எடுப்பு செய்யவும், அரசுப் புறம்போக்கு நிலங்களைக் கனிம நிறுவனத்திற்குச் சொந்தமாக்க வும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்கள்.

**முதலமைச்சர் குழந்தைகள் கல்வி சத்துணவுத் திட்டம்**

இம்மாவட்டத்தில் 1749 மையங்கள் செயல்பட்டு வரு கின்றன. குழந்தைகள் நலக் காப்பகங்கள் 587, பள்ளிச் சத் துணவுக் கூடங்கள் 1162. இத் திட்டத்தின் கீழ் இச்சத்துணவு மையங்களில் 4942 நபர்கள்



பணிபுரிந்து வருகிறார்கள். 918 பேர் விதவைகள், 209 பேர் கணவனால் கைவிடப்பட்டவர்கள். 436 பேர் ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்தவர்கள். ஒரு நாளைக்கு 1,89,161 குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டு வருகின்றது. பள்ளி செல்லா குழந்தைகள் 36,675. இக் குழந்தைகள் தவிர 5314 முதியவர்களுக்கு உணவளிக்கப்படுகின்றது. ஆக ஒரு நாளைக்கு ரூ.81,345-25 காசு செலவழிக்கப்படுகிறது.

**'சாண எரிவாயு' திட்டம்'**

இத்திட்டத்தில் இம்மாவட்டம், அரசு இலக்கை எஞ்சியுள்ளது. 4500 சுல்லாஸ் விளக்கு அமைக்கத் திட்டமிட்டதில் இதுவரை 4501 அமைக்கப்பட்டுள்ளது. புகையில்லா அடுப்பு 30 கிராமங்களில் அமைக்க அரசு திட்டமிட்டதில் 31 கிராமங்களில் மேற்குறிப்பிட்ட புகையில்லா அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய சாண எரிவாயு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு வங்கிகள் கடன் வழங்க 1,631 விண்ணப்ப்ங்கள் பெற்று 376 விண்ணப்பங்களுக்கு கடன் அனுமதி வழங்கியுள்ளன. 186 இடங்களில் முடிக்கப்பட்டுள்ளன.

**''நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறை''**

பெரம்பலூர் - மானாமதுரை சாலையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ரூ.97 இலட்சம் செலவு மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது. சார்புச் சுவர் வேலை முடிவு பெற்று விட்டது.

தேவகோட்டை நகராட்சி எல்லையில் வட்டாணம் சாலையில் மணிமுத்தாறு விரசுலியார் ஆற்றின் குறுக்கே ரூ.65/- இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. மித்ராவயல்-ஏம்பல் சாலையில் ரூ.15/- இலட்சம் மதிப்பீட்டில் சாலை உருவாக்கப்பட்டு வருகிறது. கப்பலூர் ஏம்பல் சாலையிலிருந்து குடிக்காடுக்கும் ரூ.13.76 லட்சம் செலவில் சாலை அமைத்தல் வேலை நடைபெற்று வருகின்றது.

பெரம்பலூர் - மானாமதுரை சாலையிலிருந்து வேலூருக்குச் சாலை உருவாக்கி மேம்பாடு செய்தல் பணி ரூ. 9.295 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. கண்ணங்குடி கூக்குடிச் சாலை உருவாக்கும் பணி ரூ.15/- இலட்சம் செலவு மதிப்பீட்டில் நடைபெறுகிறது. திருப்பனங்குடியிலிருந்து கோட்டையூர்-அறந்தாங்கி சந்திப்புச் சாலை உருவாக்கும் பணி ரூ.22.50 இலட்சம் செலவு மதிப்பீட்டில் நடைபெறுகிறது.

**கைத்தறி மற்றும் துணி நூல்**

மாஸ்டர் வீவர்களின் பிடியில் உள்ள நெசவாளர்களை விடுவித்து கூட்டுறவின் கீழ் கொண்டு வர, புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து அவர்கள் அதிகப் படியான கூலி பெறவும் தொடர்ந்து வேலை வாய்ப்புப் பெறவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு உறுப்பினருக்கு ரூ.180. பங்குத் தொகை கடனாக 7% வட்டியுடன் 4 ஆண்டுகளில் திருப்பி செலுத்த அரசு உதவுகிறது. அரசே நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உயர்ந்த பட்சம் 1 இலட்சம் பங்குகள் மேற்கொண்டு வருகிறது.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்**

மக்களின் ஊட்டச் சத்துக் குறை நோய்களின் மூல காரணங்களை அகற்றும் நோக்கத்தோடு தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் செயல்பட்டு வருகிறது. 6 மாதம் முதல் 36 மாதம் வரை உள்ள குழந்தைகள் இத்திட்டத்தில் பயனடைகின்றன. இம் மாவட்டத்தில் மொத்த ஊட்டச் சத்து மையங்கள் 520, மொத்த சுகாதாரத் துணை நிலையங்கள் 163. இந்த ஆண்டு 36586 குழந்தைகள் பதிவு செய்து 30890 குழந்தைகள் எடை எடுக்கப்பட்டு 98896 குழந்தைகளுக்கு இணை உணவு கொடுக்கப்பட்டுள்ளது. 11450 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். 19810 கர்ப்பிணி பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவும், 41639 குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ, 70,867 குழந்தைகளுக்குப் பூச்சி நீக்க மருந்து, 14400 குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி, 10592 குழந்தைகளுக்கு இளம் பிள்ளை வாதச் சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் 'சிங்கம் புணரி, தேவகோட்டை, இளையான்குடி, மானாமதுரை, சிவகங்கை ஆகிய ஒன்றியங்களில் மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 500 மையங்களில் 15,313 கற்போர்களும், 45 ஏட்டறிவு மையங்களில் 1,350 கற்போர்களும், கல்லூரிகளால் நடத்தப்படும் 50 மையங்களில் 1655 கற்போர்களும், ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் 300 மையங்களில் 9516 கற்போர்களும் 'ட்ருபா'( திருப்பத்தூர்) தொண்டு நிறுவனம் மூலம் 20 ஏட்டறிவு மையங்களில் 609 கற்போர்களும், 6 முறைசாராக் கல்வி மையங்களில் 180 கற்போர்களும் பயன் பெற்றுள்ளனர்.

கண்டனூர், புதுவயல் பேரூராட்சிகளில் ஆழ்துளைக் கிணற்றிலிருந்து பெற்று குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 85 மீட்டர் ஆழ்துளைக் கிணறு போடப்பட்டுள்ளது. நிமிடத்திற்கு 740 லிட்டர் வீதம் 3.0 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு நீரேற்றப்படும்.

அத்தியாவசியப் பொருட்கள் குடும்பக்கார்டுகள் மூலம் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மற்றும் இராமநாத புரம் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலை ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த 530 நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகிறன. இம்மாவட்டத்தில் குடும்ப அட்டைதாரர்கள் எண்ணிக்கை 2,39,599. இதுகாறும் 20009 டன்கள் அரிசியும், 4585 டன்கள் சர்க்கரையும், 7699 லிட்டர் மண்ணெண்ணையும் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவையர் மற்றும் விவசாயக் கூலிகள் மொத்தம் 6612 பேருக்கு அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சம்பா பட்டத்தில் 210 டன் நெல் கொள் முதல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 16 கி.மீ. 110 கே.வி. மின் பாதையும், 26 கி.மீ. உயர் அழுத்த மின்பாதையும் 72.5 கி.மீ. தாழ்வு அழுத்த மின்பாதையும் அமைக்கப்பட்டது. 22 மின் மாற்றிகள்

அமைக்கப்பட்டு விவசாய பம்பு செட்டுகளுக்கும், வீடு மற்றும் அனைத்துத் தேவைகளையும் இவை பூர்த்தி செய்துள்ளன. 153 சிறு தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 4500 வீடுகளுக்கும் 570 கடைகளுக்கும் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் குறியீடு 193. ஆனால் இதுவரை 209 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பும் 30 குடி நீர்த் தொட்டிகளுக்கும் குடிசைகளுக்கும் இலவச மின் இணைப்புக்குறியீடு 120. ஆனால் 490 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. 7200 சாதாரண விளக்குகள் குழல் விளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.


இம்மாவட்டத்திற்கு இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்கு நிதி வசூலிக்க அரசு ரூ. 2.50 இலட்சம் இலக்கு நிர்ணயித்தது. இதுவரை ரூ. 5,98,852.80 காசு வசூல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டு இந்தியாவிற்கு வந்துள்ள 104 அகதிக் குடும்பங்கள் நாட்டரசன் கோட்டை, சோழபுரம், சாக்கோட்டை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்காக ரூ.6,00,000 அரசு செலவழித்துள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 623 வேலைகள் ரூ.340 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் 15 திட்டங்களும் 26 கால்வாய் மற்றும் 583 கண்மாய் மராமத்துப் பணிகளும் அடங்கும். விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின் கீழ் ரூ.7 இலட்சம் செலவில் 13 கண்மாய்களும், ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்துள்ள 11 கண்மாய்கள் ரூ.7.5 இலட்சம் செலவிலும், முன்னாள் ஜமீன் கண்மாய்கள் ரூ. 63.24 இலட்சம் செலவிலும் மராமத்து செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு சிறு பாசனத் திட்டத்தின் கீழ் தேவகோட்டை, கந்ததேவி, வெங்கலூர், செந்தனி போன்ற ஊர்களுக்குத் தண்ணீர் வழங்க ரூ. 23.73 இலட்சம் செலவில் தொன்னாற்றின் குறுக்கே அணை கட்டுதல் பணி கல்லல் பகுதியில் மாலகண்டான் கலுதாடி கண்மாய் அமைத்தல் பணி ரூ.1.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1985—86ஆம் ஆண்டில் 6 ஊராட்சி ஒன்றியங்கள் (கல்லல், சிங்கம்புணரி, இளையான்குடி, தேவகோட்டை, கன்னங்குடி, காளையார் கோவில்) ரூ.12 இலட்சம் வீதம் மானியம் பெற தகுதி பெற்றுள்ளன. ரூ. 4.13 இலட்சம் செலவில் மானாவாரி மாதிரிப் பண்ணை அமைக்கவும் ரூ.1.890 இலட்சம், செலவில் கத்தாழை வளர்க்கவும், கால்நடை பராமரிப்பிற்காக ரூ. 0.890 இலட்சமும் ரூ.1.50 கோடி ரூபாய் செலவில் காரைக்குடியில் பால் பதத் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர் சங்கங்களை விரிவுபடுத்துவதற்காக ரூ. 4.11 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ.32 இலட்சம் செலவில் 35 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலைத்துறை மூலம் 50 ஏக்கரில் ரூ.5.410 இலட்சம் செலவில் பழப்பண்ணை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துத் துறையின் மூலம் சிங்கம்புணரியில் ரூ. 1.50 இலட்சம் செலவில் ஒட்டுண்ணி தென்னை நாற்றுப் பண்ணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்புத் துறை மூலம் 20,000 ஏக்கரில் பட்டுச் செடி வளர்க்க ரூ.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் நலத்துறையினால் நடத்தப்பெறும் தொடக்கப்பள்ளி 1, உயர் தொடக்கப்பள்ளிகள் 2; 30.9.85 முடிய ரூ. 20222, பள்ளி மாணவர்கள் மதிய உணவிற்குச் செலவிடப்பட்டுள்ளது. இந்த மாணவர்களுக்கு ரூ.1,30,990 செலவில் இலவசச் சீருடை வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி, சீருடை மாணவர்கள் விடுதி 14ம், மாணவியர் விடுதிகள் 6ம் உள்ளன. உயர் நிலைப் பள்ளிவரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு ரூ. 75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் ரூ. 54590.25 காசு செலவிடப்பட்டுள்ளது.



**சமூகநலக்காடுகள்**

இம்மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் வளர்ப்பதற்காக மரம் வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 4,40,000 நாற்றுகள் வழங்கவேண்டுமென்பது இலக்கு. இதன் மூலம் 2207 சிறு விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். மரம் வளர்ப்பு விரிவாக்கத் திட்டத்தின்கீழ் 9 இலட்சம் நாற்றுகள் வழங்க வேண்டியது. இதுவரை 8,76,480 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் பிற்பட்ட குக்கிராமங்களில் 12 ஆரம்பப் பள்ளிகள், ஒரு நடுநிலைப்பள்ளி, 2 மேல் நிலைப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன. புதிதாக 3 அரசு உயர் நிலைப்பள்ளி, 2 சத்துணவு மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியங்களில் இருந்த 257 தையல் எந்திரங்களின் மூலம் இம்மாவட்டத்திலுள்ள மேல் நிலைப்பள்ளிகளிலுள்ள மாணவிகள் அனைவரும் தையல் கலையைப் பயின்றுகொள்வதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. 8 முதல் 10வகுப்பு பயிலும் தாழ்த்தப்பட்ட 385 மாணவர்களுக்கு சிறப்பு மேற்பார்வைப் பயிற்சித் திட்டமும், 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் 165 பேருக்குச் சிறப்பு மேற்பார்வைப் பயிற்சி திட்டமும் சிறப்புற நடத்தப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க 6 பயிற்சி மையங்கள் (உயர் நிலைப்பள்ளிகளில்) ஏற்படுத்தப்பட்டன.

சிவகங்கையில் அரசு அலுவலர்கட்கு 288 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 210.05 இலட்சம் செலவிலும், காரைக்குடியில் 36 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 18.83 இலட்சம் செலவிலும், தேவகோட்டையில் 60 வாடகைக் குடியிருப்புகள் ரூபாய் 46.50 இலட்சம் செலவிலும் கட்டப்பட்டுள்ளன.

காரைக்குடி அருகிடைத் திட்டத்தின் கீழ் கோட்டையூர் கிராமத்தில் 104.84 ஏக்கரும், தேவகோட்டை அருகிடைத் திட்டத்தின் கீழ் தேவகோட்டையில் 93.24 ஏக்கரும் வீடு கட்ட நில ஆர்ஜிதத்திற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அரசு அலுவலர்கட்கு 360 குடியிருப்புகள் ரூ. 344.65 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிலமற்ற ஏழைகள் 957 நபர்களுக்கு 699 ஏக்கர் 42 சென்ட் நிலம் வேளாண்மைக்கு வழங்கப்பட்டுள்ளது.

# முத்திரை பதித்த சித்திரைப் பொருட்காட்சி

சித்திரைத் திங்களென்றாலே மதுரை மக்களின் நெஞ்சத்தில் பேரானந்தம் குவிந்து விடும். மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத் திருவிழா ஒரு காரணம் — அரசு நடத்தும் சித்திரைப் பொருட்காட்சி மற்றொரு காரணம்.

வழக்கம் போல் இந்த ஆண்டு அரசு சித்திரைப் பொருட்காட்சி தமுக்கம் மைதானத்தில் ஏப்ரல் 12 ஆம் நாளன்று மாலை தொடங்கியது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் பொருட்காட்சியைத் தொடங்கிவைத்தார்கள். மதுரை மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராசுலு இ.ஆ.ப. விழாவுக்குத் தலைமை ஏற்றார்.

வரவேற்புரை ஆற்றிய செய்தி - மக்கள்தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ. ஆ. ப., குறிப்பிட்டதாவது:

''அரசின் சார்பில் நடத்தப்படும் 31-வது பொருட்காட்சி இது. 1978 ஆம் ஆண்டு முதல், பொருட்காட்சிகளை அரசே ஏற்று நடத்தி வருகிறது. தனிப்பட்டவர்கள் நடத்தும் பொருட்காட்சியில் கேடுகள் இருந்தன. லாபமும் ஒருவருக்கே கிடைத்து வந்தது.

''இன்று தொடங்கப்படும் இந்தப் பொருட்காட்சி, அரசின் மூலம் மதுரை மாநகரில் 5 வது முறையாக நடத்தப்படுவதாகும்.

''ஒரு சிலருக்கே கிடைத்து வந்த வருவாயைத் தடுத்து, வருகின்ற லாபத்தில் 50 சதவிகிதத்தை மாநகராட்சிக்கு வழங்க வேண்டும்என்ற நல்லதிட்டத்தை அரசு செயலாற்றி வருகிறது.

''பொதுவாக செய்தித் துறை என்பது செலவு செய்யும் துறையாக இருந்தாலும் தமிழ்நாட்டில் மட்டும் தான் வருவாய் ஈட்டும் துறையாகச் செயல்படுகிறது.

''இங்கு இடம் பெற்றுள்ள அரசுத்துறை அரங்குகள் மூலம் நலத் திட்டங்கள் எளிய முறையில் மக்களுக்கு எடுத்து உணர்த்தப்படுகிறது.

''இந்த ஆண்டு நடைபெறும் பொருட்காட்சியின் மூலம் 5 இலட்சம் ரூபாய் இலாபம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 2½ இலட்சம் ரூபாய் மதுரை மாநகராட்சிக்கு அளிக்கப்படும்.''

மதுரை மாநகராட்சி ஆணையாளர் திரு தேவராஜ், தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்:

''மதுரையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் இருக்கின்ற மக்கள்




மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸுப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸுப்பர் ரின்— அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
LINTAS RIN 97 2015 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.




# அரசுப் பொருட்காட்சி -சில செய்திகள்

**சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி, கும்பகோணம், ஈரோடு ஆகிய நகரங்களில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறது.**

**இதுவரை மொத்தம் 29 பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளன. 405 லட்ச ரூபாய் வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது. செலவு போக 114 லட்ச ரூபாய் நிகர வருவாய் அரசுக்குக் கிடைத்துள்ளது.**

***சித்திரைப் பொருட்காட்சியில், அரசுத்துறை அரங்குகள் 16, அரசுச் சார்பு நிறுவனங்களின் அரங்குகள் 7, மத்திய அரசுத் துறை அரங்குகள் 2, தனியார் துறை அரங்குகள் 7 இடம் பெற்றுள்ளன. தனியார் கடைகள் 54 உள்ளன.***

***சிங்கம், புலி ஆகிய விலங்குகள் அடங்கிய விலங்குக் காட்சிச் சாலையும் இடம் பெற்றுள்ளது.***

**இந்த ஆண்டு மதுரையில் நடைபெறுவது ஐந்தாவது பொருட்காட்சியாகும். இதற்கு முன்பு, 1980, 1982, 1984, 1985 ஆகிய ஆண்டுகளில் மதுரையில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்றுள்ளது.**

பகல் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்கின்ற நிலை உள்ளது. அவர்களுக்கு மாலை நேரத்தில் மகிழ்ச்சி எய்துவதற்கு இந்த அரசுப் பொருட்காட்சி பயன்படும். கண்ணுக்கு மட்டுமின்றி, கருத்துக்கும் விருந்து கிடைக்கிறது, பொருட்காட்சியின் மூலம்.

''இளைய தலைமுறையினர், இப்பொருட்காட்சியில் உள்ள பல துறை அரங்குகளில் இடம் பெற்றுள்ள பல்வேறு தகவல்களைத் தெரிந்து அரசு எந்த வகையில் பணியாற்றுகிறது என்பதைப் புரிந்துகொண்டு, தாங்கள் பெரியவர்களானதும் சமூகத்திற்கு எந்த விதம் தொண்டாற்றலாம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.''

திரு ஏ. சிவகுமார் எம்.எல்.ஏ. பேசுகையில், ''ஆண்டு தோறும் நடத்தப்படும் இந்தக் கண்காட்சி பொதுமக்களுக்கு அறிவூட்ட நடத்தப்படும் கண்காட்சியாகும்' என்று குறிப்பிட்டார்.

திரு எம். மாரிமுத்து, எம்.எல்.ஏ. பேசுகையில், ''ஒரு காலத்தில் சூதாடும் களமாக. மட்ட ரகமான பொருள்களின் விற்பனை மையமாக- மிக மோசமான நடனங்களின் அரங்கமாக இருந்த பொருட்காட்சியை சுற்றுலாத் தலமாக—சாதனை விளக்க கூடமாக மாற்றிய பெருமை இந்த அரசைச் சாரும்'' என்று தெரிவித்தார்.

திரு அன்பழகன் எம்.எல்.ஏ. உரையாற்றுகையில், ''சென்னையில் சுற்றுலாப் பொருட்காட்சியில் இடம் பெற்ற சில அம்சங்கள் இந்தப் பொருட்காட்சியிலும் இடம் பெற வேண்டும். குறிப்பாக யோகாசனக் காட்சிகள், இலக்கிய இன்பக் காட்சி இங்கேயும் இடம் பெற வேண்டும்'' என்று கூறினார்.

விளை பொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு பாண்டியன் உரையாற்றுகையில் ''சென்னை மக்களுக்கு பொழுது போக்குவதற்குக் கடற்கரை இருக்கிறது. மதுரை மக்களுக்கு அப்படி எதுவும் கிடையாது. சித்திரை மாதம் வந்தால் பொருட்காட்சி தொடங்கப்படுவதன் மூலம் குறைந்தது 45 நாட்களுக்கு மதுரை மக்களுக்கு மன மகிழ்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

கைத்தறி விற்பனை ஆலோசனைக் குழுத் தலைவர் அனகாபுத்தூர் திரு ராமலிங்கம் உரையாற்றுகையில், ''உலகத் தமிழ் மாநாட்டின் போது மதுரையில் அமைக்கப்பட்ட கண்காட்சிக்கு இணையாக இந்தப் பொருட்காட்சி அமைந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

தலைமை வகித்த மாவட்ட ஆட்சியாளர் திரு இரா. வரதராசுலு இ.ஆ.ப. தமது உரையில் தெரிவித்ததாவது:

''அரசு மக்களுக்காகச் செய்து வரும் தொண்டுகளை — அமலாக்கும் திட்டங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கு இந்தப் பொருட்காட்சி பயன்படுகிறது''

''நான் ஜப்பான் நாட்டுக்குச் சென்ற போது அங்கு ஷிங்குபே என்ற சிறிய தீவில் ஒரு பொருட்காட்சியைக் காண வாய்ப்புக் கிடைத்தது. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் எப்படி இருப்பார்கள் என்று கற்பனை செய்து சித்திரம் தீட்டியிருந்தார்கள். நமது பொருட்காட்சிகளும் தரம் வாய்ந்ததாக விஞ்ஞானக் கருத்துக்களைக் கொண்டதாக அமைய வேண்டும்.''

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''ஒவ்வொரு மாதத்து பௌர்ணமிக்கும் சிறப்பு உண்டு. என்றாலும் சித்திரை மாதத்து பௌர்ணமிக்குத் தனிச் சிறப்பு உண்டு.

''1978ல் தான் பொருட்காட்சி நமது மாநிலத்தில் தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பெல்லாம் சூதாட்டக் களமாக— களியாட்டமைதானமாக -தனிப்பட்டவர்களின் கல்லாப் பெட்டியை நிரப்பும் சாதனமாக இருந்தது. அந்த நிலை மாறி அரசின் கருவூலத்திற்கு வந்து சேருகிறது வருவாய். ஆக்கபூர்வமான பணிகளுக்கும் பயன்படுகிறது.

''5 லட்ச ரூபாய் இலாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் சொன்னார்கள். அவர்களது எதிர்பார்ப்பை மக்கள் பொய்யாக்க வேண்டும். 5 லட்சத்துக்கு மேல் அதிக வருமானம் கிடைக்கும் வகையில் மக்கள் அதிகமான அளவில் பொருட்காட்சிக்கு வருகை புரிய வேண்டும்.

''பல இடங்களில் நாம் தனித்தனியாகப் பார்க்கும் அரிய பெரிய காட்சிகளை எல்லாம் இந்த ஒரே இடத்தில் நாம் நன்றாகப் பார்க்க முடிகிறது. அருங்காட்சி-பொருட்காட்சி—அறிவு தரும் பல்கலைக் கழகமாக விளங்க வேண்டும்''.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு அ. ராஜமாணிக்கம் நன்றி நவில, தொடக்க விழா நிறைவு பெற்றது.

**- நமது செய்தியாளர்.**




## சென்ற இதழில்

**மதுரை தமுக்கம் திடலின் நுழைவாயிலில் அமைந்திருக்கும் தமிழன்னையின் சிலை சென்ற இதழ் (16.4.86) அட்டையை அலங்கரித்தது.**

# பார்த்தோம்! படித்தோம்!

தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் கண்ணுற்றேன்; புத்தாண்டுச் சிறப்பிதழா, கவிதைச் சிறப்பிதழா என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டது. கவிஞர் சுரதாவில் தொடங்கி கவிஞர் அழ.வள்ளியப்பா வரை மொத்தம் 10 கவிஞர்களின் கவிதைகளை வாரி வழங்கியிருக்கிறீர்களே, உங்களுக்கு நன்றியைக் குவிக்கத்தான் வேண்டும்.

—எம்.மோகனசுந்தரம்
கோயம்புத்தூர்-12.

சங்கம் கண்ட தமிழகத்தின் தங்கமன முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள தமிழ்ப்புத்தாண்டு செய்தி செந்தேனாக இனித்தது.

—கே. சண்முகநாதன்,
பழனி.

அடேயப்பா! இத்தனை விதமான பணிகளையா தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் செய்து வருகிறது! இதை அறிந்தபோது வியப்பு அலைகள் என்னை வட்டமிட்டன.

—மு. குருசாமி,
நிலக்கோட்டை

'தமிழரசு' தமிழ்ப் புத்தாண்டு சிறப்பிதழ் கலைக்கருவூலம் - கருத்துப் பெட்டகம் -பாதுகாக்கப்பட வேண்டிய பொற்பேழை.

—இரெ.கயற்கண்ணன்,
நெல்லை.

எனக்கோர் ஆசை! ஒவ்வொரு இதழும் சிறப்பிதழாக வெளிவரக் கூடாதா?

—ஏ.ஆர்.எம்.பழனியப்பன்,
காரைக்குடி.

சித்திரைச் சிறப்பிதழ் உண்மையிலேயே சிறப்பாக அமைந்திருந்தது. கவிதைகள், கதைகள், கட்டுரைகள் அனைத்தும் இதயத்தைத் தொட்டன.

—அ.சொக்கலிங்கம்
வேப்பேரி

'இசைக் கல்லூரியில் இனிய விழா' கட்டுரை இனிமையாக இருந்தது.

—எஸ்.ரமேஷ்,
சைதாப்பேட்டை.

பன்மொழிப் புலவரின் ஆய்வுக் கட்டுரை இலக்கியத்தின் பெருமையை உயர்த்தியுள்ளது. இந்திய இலக்கியம் 6 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாகியிருக்கிறது என்ற செய்தியைப் படிக்கும்போது உள்ளம் குளிர்கிறது.

—அ.சுப்பையா,
மதுரை.

குன்றக்குடி அடிகளாரின் 'சிந்தனை செய்வோம் - செயல்படுவோம்' கட்டுரை சிந்தனையைத் தூண்டிவிடுகிறது. மணிமேகலை காலத்திலிருந்த அட்சய பாத்திரத்தை -புதிய அட்சய ஆண்டுடன் ஒப்பிட்டுக் கூறியிருப்பது பொருந்தும்.

—தாயுமானவன்
திருச்சி-7.

அட்டையில் வெளியிட்டுள்ள தமிழன்னை சிலை எங்களை பக்தர்களாக்கிவிட்டது. அதைப் பார்த்ததும் எங்களின் கரங்கள் எங்களை அறியாமலேயே வணங்கத்தொடங்கி விட்டன.

—கதிர்வேல் மாணிக்கம்,
கனகவல்லி, பரமக்குடி

சங்கப் புலவர்கள் அறுபத்திருவரின் செய்யுள்களைத் தக்க நேரத்தில் வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளஉங்களுக்குப் பாராட்டுதல்கள்! போற்றுதல்கள் உரித்தாகுக! பாடல் வரிகளுக்குரிய அர்த்தத்தையும் எளிய தமிழில் தந்திருக்கலாமே!

—புலவர். நமச்சிவாயனார்,
சங்கரன்கோயில்.

'தமிழகம் வளர்க்கும் நாடகக் கலை' கட்டுரை நயமாக இருந்தது. நாடகம் குறித்து அமரர் அண்ணா-தந்தை பெரியார் ஆகியோரின் கருத்துக்களையும் எடுத்துக் காட்டியுள்ள விதம், 'தமிழரசுக்'கே உரியது!

—சண்.நவநீதன்,
வத்தலக்குண்டு.

'டாமின்' தொழிற்சாலையின் தொடக்கவிழா நிகழ்ச்சிகள் சுவையாக இருந்தன. கட்டுரையைப் படித்தபோது நிகழ்ச்சியை நேரில் பார்ப்பது போன்ற திருப்தி ஏற்பட்டது.

—ஆர். சூர்யகுமார்.
வேலூர்.

இசைக் கலையைப் பற்றியும், இசைக் கருவிகளைப் பற்றியும் 'தமிழிசைப் பாக்கள்', 'இசைப் பயிர் வளர்ப்போம்' என்ற கட்டுரைகளின் மூலம் தெரிந்து கொள்ள வைத்த 'தமிழரசுக்கு' நன்றி.

—ஏ.எஸ். கிருஷ்ணமூர்த்தி,
கடலூர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for the New Year
A new range added in Chiffon, Polyester, Silk and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

